விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25

ஒலி 032 வள்ளுவர் ஆண்டு 2055 தை 06 சனிக்கிழமை (20.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### டெங்குத் தொற்றால்
## யாழ்.போதனாவில் பெண்ணொருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

டெங்குத் தொற்றால் யாழ். போதனா வைத்தியசாலையில் பெண்ணொருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு முழங்காவில் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

டெங்குத் தொற்றுக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் 15

இன்று முதல் உங்கள் வலம்புரியில்
## மாதப் பலன்கள்
வாசிக்கத் தவறாதீர்கள்

## இளம் பொறியியலாளர் டெங்கால் உயிரிழப்பு
### அரியாலையில் துயரம்



(யாழ்ப்பாணம்)

டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இளம் பொறியியலாளர் ஒருவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இதில் அரியாலையைச் சேர்ந்த செல்வராஜா சிந்துஜன் 16

## தமிழரசுக் கட்சியின் தலைமை நாளை தெரிவு
### திருமலையில் வாக்கெடுப்புக்கு ஏற்பாடு

(திருகோணமலை)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையினைத் தெரிவு செய்யும் தேர்தல் நாளை ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சுமந்திரன், யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவ பதவிக்கு தேர்தல் இன்றி ஒரு 15

# பொருளாதார மீட்சி குறைந்த மட்டத்தில்
### சர்வதேச நாணய நிதியம்



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத் தன்மையுடன் காணப்பட்டாலும் பொருளாதாரத்தின் மீட்சி என்பது குறைந்த மட்டத்திலேயே காணப்படுவதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக் குழுவின் தலைவர் பீற்றர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### முள்ளிவாய்க்கால் கடற்கரையில்
## பங்களாதேஷ் மீனவரின் சடலம் கரையொதுங்கியது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பங்களாதேஷ் மீனவரின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கடற்கரை பகுதியில் அடையாளம் தெரியாத மீனவர் ஒருவரின் சடலம் நேற்று கரை ஒதுங்கியுள்ளது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் உள்ள இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதி கடற்கரையிலேயே இந்த சடலம் கரை ஒதுங்கி உள் 15

### நாடு முழுவதும்
## அரசுக்கு எதிராக பேரணிகள்

(கொழும்பு)

நாடு முழுவதும் அரசாங்கத்துக்கு எதிராக பேரணிகளை நடத்துவதற்கு ஐக்கிய 15

## யாழ்ப்பாணத்தில் ட்ரோன் கமரா மூலம் நுளம்பு பரவும் இடங்கள் கண்காணிப்பு
### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ட்ரோன் கமரா மூலம் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை கண்காணிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் சுற்றுச்சூழலை நுளம்புகள் பரவாத வகையில் பாதுகாக்க வேண்டும் என சுகாதார தரப்புகள் எச்சரித்துள்ளன.

இதன்போது சில வீடுகளிற்கு சுகாதாரத் தரப்பால் சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. 15

### 24ஆம் திகதி
## நயினைத் தாய்க்கு கும்பாபிஷேகம்

(நயினாதீவு)

வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாக பூஷணி அம்மன் 15

## பயங்கரவாத சட்டமூலத்தை மீளாய்வு செய்ய வேண்டும்
### ஐ.நா மனித உரிமை பேரவை வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் தனது உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை மீளாய்வு செய்யவேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அறிக்கையொன்றின் மூலமே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள மிகவும் ஆபத்தான பயங்கரவாத எதிர்ப்பு 15

## யாழ்.மாவட்டத்தில் டெங்குத் தாக்கம் அதிகரிப்பு
### சுகாதார தரப்பால் விசேட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நோயாளர் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இணுவில் கந்தசுவாமி கோயில்

### தைப்பூச பெருமஞ்சத் திருவிழா

### தற்காலிக கடைகள் போடுவதற்கான அனுமதியினை பெறல்

**காலம் : 25.01.2024 வியாழக்கிழமை**
**மஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.**

அன்றையதினம் ஆலய சுற்று சூழலில் கடைகள், உணவகங்கள் அமைப்பதற்கு முன்கூட்டியே அனுமதி பெறுவதற்கான கூட்டம் இணுவில் அறிவாலயத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை 22.01.2024 மாலை 4.30 மணிக்கு ஆலய நிர்வாக சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**இத்திருவிழாவில் தங்கள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட விரும்புபவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு அனுமதியினை பெற்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**நிர்வாக சபையினர்**
**இணுவில் கந்தசுவாமி கோயில்**

(C-8167)


# மன்னாரில் விபத்து குடும்பஸ்தர் மரணம்

(மன்னார்)

மன்னாரில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதி,பள்ளமடு வைத்தியசாலையில் இருந்து சற்று தொலைவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சிறிய ரக பேருந்து மன்னார் யாழ் பிரதான வீதியூடாக பயணித்த போது துவிச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் மீது குறித்த பேருந்து மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன் போது கோயில் குளம் பகுதியை சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார், அதே கிராமத்தைச் சேர்ந்த 45 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-7,285)

## பொருளாதார...

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த 9 நாள் பயணம் நேற்றுடன் நிறைவடைந்தது.

இந்நிலையில் நேற்று பிற்பகல் இலங்கை மத்திய வங்கியில் விசேட ஊடக சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர்,

இலங்கை அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டங்கள் நம்பிக்கை அளிக்கின்றன.

எனினும் இந்தச் சூழலில், சீர்திருத்த வேகத்தை நிலைநிறுத்துவது மற்றும் அனைத்து திட்ட உறுதிப்பாடுகளையும் ச்ரியான நேரத்தில் செயல்படுத்துவதை உறுதி செய்வது அவசியம்.

அதுவே எமது நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்தும். ஆனால் எல்லாத் திட்டங்களும் அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் அமைய வேண்டும்.

நியாயமான சுமைப் பகிர்வை உறுதிசெய்வது மிக முக்கியமானது.

வரி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், வரி விலக்குகளை நீக்குதல் மற்றும் சீர் திருத்தங்களை மேலும் நிலையானதாக மாற்றவேண்டும்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கியின் வெற்றியைக் கட்டியெழுப்புவதுடன், எதிர்கால நாணயக் கொள்கை முடிவுகள் பணவீக்க எதிர்பார்ப்புகளை நன்கு நிலைநிறுத்து வதை மையமாகக் கொண்டே இலங்கையின் விவேகம் அமைய வேண்டும் என்றார். (ம-7)


## லங்கா மஹால்(PVT) LTD

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1900/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2290/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(18689)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION · MoneyGram · Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
**077 8393 974**



## இணுவில் கந்தசுவாமி கோயில்

### தைப்பூச உலகப் பெருமஞ்சத் திருவிழா

# பால்குடப் பவனி





**காலம் :** 25.01.2024 வியாழக்கிழமை

**நேரம் :** காலை 6 மணிக்கு பால்குடப் பவனி இணுவில் மருதனார் மடம் பல்லப்பை வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பம்

**குறிப்பு :**
- பால், குடம் என்பன ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (வீட்டிலிருந்து எந்தப் பொருட்களும் கொண்டு வரத் தேவையில்லை)
- சென்றவருடம் போல் நேர்த்தி செய்வதற்கு யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து பெருந்தொகையான பக்தர்கள் பால்குடத்தில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதனால் **முற்பதிவுகளை 23.01.2024 செவ்வாய்க்கிழமைக்கு** முன்பு ஆலய கருமபீடத்தில் மாலை 4-6 மணி வரை மேற்கொள்ளலாம்.

**பால்குடப் பற்றுச்சீட்டு 400/=**

- வருடத்தில் ஒருதடவை சண்முகப்பெருமானுக்கு முருக பக்தர்கள் எல்லோரும் கூடி எடுக்கும் பால்குடப் பவனியில் நாம் எல்லோரும் கலந்து சண்முகப்பெருமானுக்கு பால் அபிஷேகம் செய்திடுவோம் வாரீர்...

(18687)

அனுசரணை
**ஆச்சி மிக்ஷர்**
இணுவில் கந்தசுவாமி கோயிலடி





அமுதசுரபி

ஆவினது மகனுக்கு அட்சம் தந்து
அடுத்து வந்த மேகலைக்குச் சுரபி தந்து
மேவி வரும் அடியவர்க்கு அமுதம் தந்து
மேன்மேலும் பெருங்கருணை அள்ளித் தந்து
தேடிவரும் தொண்டர்குறை தீர்த்து
ஆன்ம சித்தியுடன் முத்திபெற வைத்து
இன்பம் கோடிதரும் நயினையுறை நாகம் மாளே
குண்டலியே குடமுழுக்கு ஆடீர் அம்மா

## நயினையில் ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கு திருக்குடமுழுக்குப் பெருவிழா 24.01.2024

### நாடி வரும் அடியவர்களுக்கு அமுத சுரபியில் அன்னதானம்

நயினாதீவில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் அன்னை நாகபூஷணி அம்மனுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் 24.01.2024 ஆம் திகதி திருக்குடமுழுக்குப் பெருவிழா மிகவும் சிறப்புற நடைபெற அன்னையின் திருவருள் கூடி நிற்கின்றது. இக்காலத்தில் (20.01.2024 - 25.01.2024) அன்னையைத் தரிசிக்கவரும் அடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான மண்டபத்தில் சிறப்பு அன்னதானம் நடைபெறும்.

**நிர்வாகம்**
**ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை**

**பிரதான சாலை, நயினாதீவு - 02.**

(18670)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் - ஈரான் இடையே பதற்றம்; இலங்கையின் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படலாம்

## சர்வதேச ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**பாகிஸ்தானுக்கும் ஈரானுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழல் காரணமாக ஒட்டுமொத்த ஆசியப் பிராந்தியமும் பாதிக்கப்படலாம் என சர்வதேச ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

அதன் ஊடாக இலங்கையின் பொருளாதாரமும் பாதிக்கப்படலாம் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையின் ஏற்றுமதியின் முக்கிய இலக்குகளில் ஒன்றாக மேற்கு ஆசியப் பிராந்தியம் உள்ளமையே இதற்குக் காரணமாகும்.

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

கடந்த வருடம் இந்த நாட்டில் ஏற்பட்ட பெரிய வெங்காய நெருக்கடியை அடுத்து பாகிஸ்தானில் இருந்து அதிகளவு பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஈரான் இலங்கை தேயிலையின் பிரதான ஏற்றுமதியாளராக உள்ளது.

இந்த பதற்றத்திற்கு மத்தியில் ஈரான் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டால் அது இலங்கைக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் என இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் மற்றும் அரசியல் தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அதுலசிறி சமரகோன் தெரிவித்தார்.

ஏற்றுமதி இறக்குமதிக்கு கடும் நெருக்கடி நிலையை இலங்கை சந்திக்க நேரிடும் அபாயம் உள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நெருக்கடி நிலைமைக்கு பதிலளிப்பதில் இலங்கை மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இந்த வருடம் முதல் இ-பாஸ்போட்

(கொழும்பு)

இலங்கையில் இந்த வருடம் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பணிப்பாளர் ஐ.எஸ்.எச்.ஜே. இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார். இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இ-பாஸ்போர்ட்களை அறிமுகம் செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கையை தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

# பொலிஸ்மா அதிபராக தென்னக்கோனை நியமிக்க வேண்டாம்

## ஐ.ம.ச மனுத்தாக்கல்

(கொழும்பு)

"பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை, பொலிஸ்மா அதிபராக நியமிக்க வேண்டாமென" வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியினால் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



குறித்த மனுவில் 'கைது செய்யப்பட்டவர்களை சித்திரவதை செய்தமை, அடிப்படை உரிமைகளை மீறியமை, போராட்டகளத்தில் தாக்குதல் நடத்தியமை உள்ளிட்ட விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## மின்சார சபை மறுசீரமைப்பிற்கு எதிராக

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 17 பேர் பணி இடைநிறுத்தம்



(கொழும்பு)

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை மின்சார சபையின் 17 பணியாளர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

மின்சார சபையின் காசாளர் கருமபீடங்களில் பணியாற்றியவர்களே இவ்வாறு சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான சட்டமூலத்திற்கு எதிராக, அந்த காரியாலய வளாகத்தில் இலங்கை மின்சார சபை தொழிற்சங்கம் அண்மையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தது.

இதன்படி, மின்சார சபையின் நிர்வாகத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை மீறும் வகையில் சேவைகளுக்கு இடையூறு விளைவிக்கும் ஊழியர்களை பணிஇடைநீக்கம் செய்து உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இலங்கை மின்சார சபை நிர்வாகத்திற்கு பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

கானலய நுண்கலைப் பயிலகத்தின் மாணவன் ரமண சர்மா லயசர்மாவின் மிருதங்க அரங்கேற்றம் நாளை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மண்டபத்தில் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் நாக தமிழிந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி.என். சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

# சர்வதேச சந்தையில் எரிவாயு விலை உயர்வு

(கொழும்பு)

உலக சந்தையில் இயற்கை எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வகையில் இயற்கை எரிவாயுவின் விலை நேற்று 2.70 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை சற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 74.6 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. மேலும் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 79.10 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

பாகிஸ்தானுக்கும் ஈரானுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழல் காரணமாக ஒட்டுமொத்த ஆசியப் பிராந்தியமும் பாதிக்கப்படலாம் என சர்வதேச ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இலங்கையின் பொருளாதாரமும் பாதிக்கப்படலாம் என அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஐ.எம்.எப் இன் நிபந்தனை எனக் கூறி வரிகளை திணிக்கும் அரசு

## சுட்டிக்காட்டிய சஜித்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தின் அண்மைய போக்குகளை ஆய்வு செய்வதை முக்கிய நோக்கமாக கொண்டு நாட்டிற்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழு மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனை எனக் கூறி மக்களுக்கு பெரும் வரிச்சுமையை சுமத்தி,வற் உட்பட பல்வேறு வகையான வரிகளை கூடிய அளவில் பிறப்பித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

பொதுமக்கள்,கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள், நடுத்தர வர்க்கத்தினர், அரச ஊழியர்கள் என பல துறைகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆதாரங்களுடனும் உண்மை சாட்சி மற்றும் தரவுகளுடனும் இங்கு சுட்டிக்காட்டினார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிண்ணத்தை சுவீகரித்தது சாவகச்சேரி ஐக்கிய அணி



தென்மராட்சி ஐக்கிய அணிகளுக்கு இடையில் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கிரிக்கெட் தொடரில் சாவகச்சேரி ஐக்கிய அணியினர் கிண்ணத்தை தனதாக்கிகொண்டனர் .

கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சாவகச்சேரி ஐக்கியம் மற்றும் மட்டுவில் ஐக்கியம் ஆகிய அணிகள் மோதிய நிலையில் சாவகச்சேரி ஐக்கிய அணி வெற்றி பெற்றிருந்தது.

இந்தத் தொடரின் சிறந்த விளை யாட்டு வீரராக சாவகச்சேரி ஐக்கிய அணியினை சேர்ந்தயது , சிறந்த பந்து வீச்சாளராக சாவகச்சேரி ஐக்கிய அணியினை சேர்ந்த நிதர்சன் மற்றும் சிறந்த பந்துத் தடுப்பாளராக சாவகச்சேரி ஐக்கிய அணியினை சேர்ந்த தனுஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இத் தொடரில் கைதடி ஐக்கியம், நாவற்குழி ஐக்கியம், மட்டுவில் ஐக்கியம்,சாவகச்சேரி ஐக்கியம் ஆகிய நான்கு அணிகள் பங்குப்பற்றியிருந்தன.

இறுதிப் போட்டிக்கு மட்டுவில் ஐக்கியம் மற்றும் சாவகச்சேரி ஐக்கிய அணிகள் தகுதி பெற்றன.

தொடர்ச்சியாக 5 ஆவது வருடம் நடைபெறும் இப்போடியில் முதல் மூன்று வருடங்களும் கைதடி ஐக்கிய அணியும் கடந்த வருடமும் இவ்வருடமும் சாவகச்சேரி ஐக்கிய அணியும் கிண்ணங்கள் வென்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30)

# கே.சி.சி.சி கிண்ண

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி



அமரர்.பாலசிங்கம் மயூரதன் ஞாபகார்த்தமாக கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டு கழகம் இணைந்து நடத்தும் 8 ஆவது கே.சி.சி.சி கிண்ண கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இம் மாத. இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# இலங்கை ஆப்கான் தொடர் பெப்ரவரி

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி, மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடுவதற்காக எதிர்வரும் 30ஆம் திகதி இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றது.

இதில் முதலாவதாக ஒரேயொரு டெஸ்ட் போட்டி, எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி கொழும்பு- எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதனைத்தொடர்ந்து, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், பகலிரவு போட்டியின் முதல் போட்டி, எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதியும் மிகுதி இரு போட்டிகளும் கொழும்பு-ஆர். பிரேமதாஸ மைதானத்திலும் மூன்று போட்டிகள் கொண்ட இருபது -20 தொடர், தம்புள்ளை- ரன்கிரி மைதானத்தில் நடைபெறுகின்றது. முதல் போட்டி, பெப்ரவரி 17ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)




# இருபது-20 தொடரை வென்றது இலங்கை அணி




சிம்பாவே அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான இருபது-20 போட்டியில் 9 விக்கெட்களால் வெற்றிபெற்று இலங்கை அணி இருபது- 20 தொடரையும் கைப்பற்றியுள்ளது.

ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய சிம்பாவே அணி 14.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 82 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ஹசரங்க 4 விக்கெட்களையும் தீக்ஷண மற்றும் மத்தியூஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினார்.

இதனை தொடர்ந்து 83 ஓட்டங்களை வெற்றி இலக்காக இலங்கை அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான துடுப்பாட்டம் மூலம் இலங்கை அணி 50 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இருப்பினும் 7.4 ஆவது ஓவரில் குஷால் மெண்டிஸ் 33 ஓட்டங்களோடு ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடந்து சிறப்பாக விளையாடிய இலங்கை அணி 10.5 ஓவர்களில் வெற்றி இலக்கை கடந்தது. அவ் அணி சார்பாக பத்தும் நிஸ்ஸங்க ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தார்.

இதன் காரணமாக மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை இலங்கை அணி 2-1 என கைப்பற்றியது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக வணிந்து ஹசரங்க தெரிவு செய்யப்பட்டார். இதேநேரம் தொடரின் நாயகனாக அஞ்சலோ மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இதற்கு முன்னர் இடம்பெற்ற ஒருநாள் தொடரை இலங்கை அணி 2-0 என கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஆஸி ஓபன் டென்னிஸ் பிளின்கோவா வெற்றி

அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் தொடர்மெல்போர்னில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் கஜகஸ்தானைச் சேர்ந்த 3 ஆம் நிலை வீராங்கனையான எலினா ரிபாகினா,தரவரிசையில் 57 ஆவது இடம் வகிக்கும் ரஷ்யா வின் அன்ன பிளின்கோவாவுடன் மோதினார்.

இருவரும் தலா ஒரு செட்டை வசப்படுத்தினர்.வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டை பிரேக்கர் வரை சென்றது. இருவரும் சளைக்காமல் மல்லுக்கட்டினர். இறுதியில் எதிராளி பந்தை வெளியே அடித்ததன் மூலம் வெற்றிக் குரிய புள்ளியை ஈட்டிய பிளின்கோவா ஒரு வழி யாக டை பிரேக்கர் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்.

ஆட்டத்தின் முடிவில் பிளின்கோவா 6-4, 4-6, 7-6 (22-20) என்ற செட் கணக்கில் ரிபா கினாவை தோற்கடித்து அவுஸ்திரேலிய ஓபனில் முதல் முறையாக 3 ஆவது சுற்றை எட்டினார்.(நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌதாரிமுனை வீதியினை புனரமைத்து தாருங்கள்

## மக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனை வீதியினை நிரந்தரமாக புனரமைத்து தாருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கௌதாரிமுனை கிராமத்தில் 100 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து ஒன்றே பணியில் ஈடுபடுகின்றது. மேலும் பரமன்கிராய் சந்தியில் இருந்து கௌதாரி முனை வரையான 20 கிலோமீற்றர் வரையான தற்காலிக வீதியில் பெருங் குழிகள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை.

பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் கௌதாரிமுனை வீதியினை புனரமையுங்கள் என தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும். வீதி புனரமைப்பிற்கான எந்த நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

குறிப்பாக பூநகரி பிரதேச மருத்துவமனைக்கு கௌதாரிமுனையில் இருந்து இரவு வேளைகளில் மகப்பேற்றிற்குரிய பெண்கள் மற்றும் நோயாளர்களை அவசரமாக கொண்டு வருவதற்கு நீண்ட நேரம் எடுப்பதாக பொது மக்கள் தெரிவித்தனர்.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து குறித்த வீதியினை புனரமைத்து தரக் கோரி அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

# ரூ.8 லட்சம் பெறுமதியான நகை திருட்டில் ஈடுபட்டவர் கைது

## களவாடப்பட்ட நகை மீட்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் எட்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான நகை திருட்டில் ஈடுபட்ட ஒரு பெண் உட்பட நான்கு சந்தேக நபர்களையும் நகைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

முழங்காவில் பொலிஸார் கடந்த 13 ஆம் திகதி முழங்காவில் குமிழமுனை பகுதியில் உள்ள வீட்டில் ஆட்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் தாலிக் கொடி திருடப்பட்ட நிலையில் முழங்காவில் பொலிஸில் முறைப்பாடு பதியப்பட்டதையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த முழங்காவில் பதில் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழு யாழ்ப்பாணத்திலுள்ள நகை விற்பனை நிலையம் ஒன்றில் குறித்த தாலிக்கொடியை விற்ற நிலையில் குறித்த நகையையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நகையை விற்று தொலைக்காட்சி உள்ளிட்ட பொருட்களை கொள்வனவு செய்துள்ளனர்.

கொள்வனவு செய்த பொருட்களையும் பொலிஸார் மீட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களையும் மீட்கப்பட்ட பொருட்கள், நகையையும் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர். (நி-5-6-316)





இத்தாலியில் உள்ள இலங்கை தூதரகத்தில் கடந்த திங்கட்கிழமை தூதரகத்தின் துணைத் தூதுவர் இரத்தினசிங்கம் கோகுலரங்கன் தலைமையில் இடம்பெற்ற பொங்கல் விழா.


## பொது அறிவித்தல்
## வேலணை பிரதேச சபை

வேலணை பிரதேச சபை எல்லைக்குள் தனியார் குடிநீர் விநியோகத்தில் ஈடுபடுகின்றவர்கள் உரிய அனுமதியினை 15.02.2024 இற்கு முன்னர் பெற்று தமது நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு 15.02.2024 இற்கு பின்னர் உரிய அனுமதியின்றி சேவையில் ஈடுபடுபவர்கள் மீது பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளிற்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**செயலாளர்,**
**வேலணை பிரதேச சபை.**

(C-8166)


# இராசிபலன்

**20.01.2024**
**தை 06, சனிக்கிழமை**
**தசமி முன்னிரவு 10.49 மணிவரை**
**பரணி காலை 6.38 மணிவரை**

**கார்த்திகை பின்னிரவு 6.10 மணிவரை**
**சுபநேரம் -3.35-5.05 மணிவரை**
**இராகுகாலம்-9.35-11.05 மணிவரை**
**கார்த்திகை விரதம், சித்தாமிர்தம்**

சந்திராஷ்டமம்
அத்தம்.

**வளவன்**

**மேஷம்**
பணத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்**
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பணம் பற்றிய கவலை உருவாகி மறையும், பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்**
எடுத்த காரியங்களை நிறைவேற்ற ஒரு முறைக்கு பல முறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.

**கடகம்**
குடும்பத்தில் குதூகலம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்**
குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி**
எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**துலாம்**
கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மறதியால் ஒரு சில வேலைகளைச் செய்யாமல் விட்டுவிடுவீர்கள்.

**விருச்சிகம்**
கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.

**தனுசு**
இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி கைகூடும், போட்டிகளில் முன்னேற்றம் காணும் நாள், கடன்சுமை குறைய வழி வகை செய்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்**
நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உறவினர் வழியில் எதிர்ப்புகள் கைகூடும், செய்தொழிலில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

**மீனம்**
பகை விலகி பாசம் கூடும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

மிகவும் விர[illegible] சிரிக்காத நாள் மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் விதைகளை பாதுகாக்க குளிரூட்டப்பட்ட களஞ்சியம் தேவை

## ஆலோசிப்பதாக தெரிவித்த விவசாய அமைச்சர்



(சாவகச்சேரி)

நாட்டில் ஏற்பட்டுள்ள மரக்கறி விலையேற்றத்தை தவிர்க்கும் முகமாக மாற்றீட்டு பயிர்ச்செய்கைகளை யாழ்.மாவட்டத்தில் முன்னெடுப்பது சம்பந்தமாக யாழ், கிளிநொச்சிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கோரிக்கைக்கு அமைய விசேட மூலோபாய கலந்துரையாடல் நேற்று முன்தினம் விவசாய அமைச்சில் இடம்பெற்றது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் தற்போது நிலவும் மரக்கறி தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டன. இதன்போது குறித்த மரக்கறிகளை யாழ்.மாவட்டத்திலிருந்தும் பருவகால அடிப்படையில் உற்பத்தி செய்வதன் ஊடாக இவ்வாறான தட்டுப்பாடுகள் மற்றும் விலைத்தளம்பலை தவிர்க்க முடியும் என யோசனை முன்வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் விவசாய அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்படும் இதர திட்டங்களின் ஊடாக விவசாய உற்பத்திகளை பெறுமதி சேர் உற்பத்திகளாக மாற்றுவது தொடர்பாக விவசாய அமைச்சு கவனம் செலுத்தவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கருத்து தெரிவித்த மாகாண விவசாய பணிப்பாளர், யாழில் விவசாயத்துக்கு தேவையான விதைகளை பாதுகாத்து பராமரிக்கக்கூடிய வகையில் குளிரூட்டப்பட்ட களஞ்சியமொன்றை அமைப்பதால், விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விதைகளை வழங்க முடியும். இதற்காக அச்சுவேலியில் இருக்கும் களஞ்சியத்தை குளிரூட்டப்பட்ட களஞ்சியமாக மாற்றியமைக்க முடியும் எனவும் யோசனையை முன்வைத்தார். இதனை உடனடிக் கவன த்தில் எடுத்துக் கொள்வதாக விவுசாய அமைச்சர் தெரிவித்தார். (நி-5-6-30-33)



வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டு கழகம் நடத்திய மூன்றாவது பட்டத் திருவிழா அண்மையில் இடம்பெற்றது. (படம்:-மகாலிங்கம்)

# தடை செய்யப்பட்ட வலைகள் கடற்படையினரால் பறிமுதல்

(கரணவாய்)



யாழ்.வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் பகுதியில் வெற்றிலைக் கேணி கடற்படையினர் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டு மீனவர்களையும் கடற்றொழில் சொத்துக்களையும் சோதனையிட்டனர்.

இதன்போது தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை வைத்திருந்த மீனவர்களிடம் இருந்து குறித்த வலைகள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கட்டைக்காட்டில் சட்டவிரோத சுருக்குவலை தொழில் இடம்பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே கடற்படையினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர் என்றும் சுருக்கு வலை அகப்படவில்லை.

ஆனால் அதிகளவு தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டதோடு கைப்பற்றப்பட்ட வலைகளை அழிக்கும் நடவடிக்கையை கடற்படையினர் முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-60)

# சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது

## 12 லீற்றர் மதுபானம் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழில் 12 லீற்றர் சட்டவிரோத மதுபானத்துடன் நபர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொலிஸாருக்கு கிடைக்கபெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள வீடொன்றில் சோதனை இட்ட வேளை விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மதுபானத்தை பொலிஸார் மீட்டதோடு வீட்டில் இருந்த 53 வயதுடைய நபரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33)

# அ.இ.தி மகாசபையின் மாநாடும் கலைநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 74 ஆவது வருடாந்த மாநாடும் கல்விசார் ஊக்குவிப்பு வழங்கலும் கௌரவிப்பு மற்றும் கலைநிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் மத்தி இளங்கதிர் சனசமூக நிலைய மண்டபத்தில் அ.இ.தி மகாசபையின் தலைவர் நா.கிருஷ்ணபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு மக்கள் வங்கியின் முகாமையாளர் திருமதி.புஷாலினி தியாகராசா கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6)

# விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைச் சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான பரீட்சை விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி எதிர்வரும் 05.02.2024 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான பரீட்சைகள் அனைத்தும் வரும் மே மாதம் நடைபெறவிருக்கும் க.பொ.த (சா.த) பரீட்சைகள் முடிவடைந்த பின்னர் நடைபெறும் என சபைத் தலைவர் பொ.ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

# திருமறைக் கலாமன்றில் பொங்கல் விழா கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தைத்திருநாளை சிறப்பிக்கும் வகையில் திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்ற பொங்கல் விழாவின் முதலாவது பகுதியான பொங்கல் வைபவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றதையடுத்து அதன் இரண்டாவது பகுதியான கலை நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை மாலை இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி,பண்பாட்டலுவல்கள் , விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கலைநிகழ்ச்சிகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனம்,திருமறைக் கலாமன்ற இசைக் கலைஞர்களின் பொங்கல் பாடல்கள், மன்ற நாடகப் பயிலக மாணவர்களின் "இதுவும் கடந்து போகும்" நாடகம் என்பவற்றுடன் ஜொணி மதுரநாயகம், தர்மினி [illegible] ஆகியோரின் கவிதை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (நி-5-6)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 550 | 700 | 700 | 600 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1100 | 1200 | 1000 |
| தக்காளி | 550 | 500 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 150 | 150 |
| கோவா | 750 | 650 | 700 | 800 |
| கரட் | 1500 | 1800 | 1200 | 2500 |
| பூசணி | 140 | 140 | 160 | 200 |
| புடோல் | 350 | 250 | 260 | 300 |
| வாழைக்காய் | 250 | 240 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 450 | 450 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 380 | 350 | 400 | 450 |
| பாகற்காய் | 800 | 700 | 800 | 1200 |
| வெண்டக்காய் | 450 | 500 | 300 | 600 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 700 | 700 | 600 | 600 |
| லீக்ஸ் | 450 | 600 | 650 | 800 |
| பீற்றூட் | 800 | 700 | 800 | 900 |
| கறிமிளகாய் | 650 | 650 | 700 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | 3000 | 3000 |
| போஞ்சி | 650 | 550 | 650 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 500 | 400 | 600 | 500 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 200 | 200 |
| தேசிக்காய் | 250 | 300 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 120 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 600 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 600 | 450 | 700 | 1000 |
| முள்ளங்கி | 200 | 200 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசிபலன்கள்

## மேஷம்

மேஷ இராசி வாசகர்களே!

வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை நல்லபடியே இருக்கும். பண வரவு திருப்தி தருவதாக இருக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பத்தில் வசதி வாய்ப்புகள் பெருகும். வீட்டில் மகிழ்ச்சியும் நிம்மதியும் குடிகொள்ளும். பெண்களால் நன்மை உண்டாகும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் வழியில் நன்மைகள் ஏற்படும். குடும்பத் தேவைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினையில் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு தடைப்பட்ட திருமணம் கூடி வரும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வெளியூர்ப் பயணங்களின்போது கைப்பொருட்களை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவும்.

அலுவலகத்தில் உற்சாகமாகச் செயற்படுவீர்கள். உங்கள் ஆலோசனைகள் நிர்வாகத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிகாரிகளின் ஆதரவும் உங்களுக்குக் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

தொழில் மற்றும் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக போட்டியாளர்களின் மறைமுக எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். பங்குதாரர்களுடன் இணக்கமான சூழ்நிலை ஏற்படும். ஆனாலும், வியாபாரத்தை விரிவுபடுத்தவோ அல்லது புதிய முதலீடு செய்வதையோ கண்டிப்பாகத் தவிர்க்கவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் மாதமாக இருக்கும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைகள் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். உறவினர்களும் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் அனுகூலம் உண்டாகும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**சாதகமான நாட்கள்:** ஜன: 17,20,23,26,31 பெப்: 1,8,10,13

**சந்திராஷ்டம நாட்கள்:** பெப் 4 அதிகாலை முதல் 5,6 காலை வரை

**அதிர்ஷ்ட எண்கள்:** 2, 5

**வழிபடவேண்டிய தெய்வம்:** முருகப் பெருமான்

**பரிகாரம்:** தினமும் அல்லது செவ்வாய்க்கிழமைகளில் கந்தசஷ்டி கவசம் பாராயணம் செய்வது நல்லது.




## ரிஷபம்

ரிஷப இராசி வாசகர்களே!

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். பிள்ளைகளால் அனுகூலம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேரும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்கள் வருகையால் ஆதாயம் உண்டாகும். பழுதான மின்சார, மின்னணு சாதனங்களை மாற்றி புதிதாக வாங்குவீர்கள். தந்தை வழியில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் நலனில் ஆரோக்கியம் தேவை. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நீண்டநாளாகச் செல்ல நினைத்த வெளிமாநில புண்ணியத் தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் ஆலோசனைகளுக்கு முக்கியத்துவம் தருவார்கள். பங்குகள் மூலம் பணம் வருவதற்கு வாய்ப்பு உண்டு. மாத முற்பகுதியில் தாய்மாமன் வழியில் சில சங்கடங்கள் ஏற்படக் கூடும் என்றாலும் அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படாது. உணவு விடயத்தில் கவனம் தேவை.

அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்தினரின் ஆதரவு கிடைக்கும். உங்கள் ஆலோசனைகள் பாராட்டப்படும். சக ஊழியர்கள் கேட்கும் சந்தேகங்களைத் தீர்ப்பதுடன் அவர்களுடைய பணிகளில் உதவி செய்வீர்கள்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு உழைக்கிறீர்களோ அவ்வளவுக்கு லாபம் கிடைக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். மறைமுகப் போட்டிகளை முறியடிப்பீர்கள். சக வியாபாரிகளுடன் இணக்கமாகப் பழகுவது நல்லது.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சற்று சிரமம் தரும் மாதமாக இருக்கும். ஆனாலும், பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இருக்காது. அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**சாதகமான நாட்கள்:** ஜன:17,20, 22,25,29, பெப்: 2,4,11

**சந்திராஷ்டம நாட்கள்:** பெப் 6 காலை முதல் 7, 8 மதியம் வரை

**அதிர்ஷ்ட எண்கள்:** 7, 9

**வழிபடவேண்டிய தெய்வம்:** சூரியன், தட்சிணாமூர்த்தி

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியனுக்குச் செம்பருத்திமாலை அணிவித்து அர்ச்சனை செய்வதும் ஆதித்ய ஹ்ருதயம் பாராயணம் செய்வதும் நன்மை தரும். வியாழக்கிழமைகளில் தட்சிணா மூர்த்திக்கு மஞ்சள் மலர்களால் அர்ச்சனை செய்து வழிபடுவதும் நன்மை தரும்.




## மிதுனம்

மிதுன இராசி வாசகர்களே!

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும் மாதம். அரசாங்கக் காரியங்கள் தாமதமாகவே முடியும். வழக்குகளில் சாதகமான போக்கு ஏற்படும். எதிலும் வெற்றியே காண்பீர்கள். எதிரிகள் பணிந்து போவர். அவர்களால் மறைமுக ஆதாயமும் உண்டாகும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாதப் பிற்பகுதியில் சகோதரர்களுடன் சிறுசிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டு சரியாகும். தாய்வழி உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். திருமண முயற்சிகள் கைகூடும். சிலருக்கு திடீர் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். உறவினர்களாலும் நண்பர்களாலும் ஆதாயம் உண்டாகும். அவர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படக்கூடும். ஆனால், உடல் நலனில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையாக இருக்கவும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவருடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம்.

உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும் என்றாலும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் மிகச் சிறப்பாகச் செய்து, அதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். சிலருக்கு தடைப்பட்ட பதவி உயர்வு ஊதிய உயர்வு போன்ற பலன்கள் கிடைக்கும்.

தொழில், வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும். சக வியாபாரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் லைசென்ஸ் போன்ற விடயங்கள் கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை உற்சாகம் தரும். எதிர்பார்த்தபடியே சலுகைகள் கிடைக்கும்.

**சாதகமான நாட்கள்:** ஜன:16,19, 21,25,28 பெப்: 1,4,6,12

**சந்திராஷ்டம நாள்கள்:** பெப் 8 மதியம் முதல் 9, 10 மாலை வரை

**அதிர்ஷ்ட எண்கள்:** 3,7

**வழிபடவேண்டிய தெய்வம்:** முருகப்பெருமான், மகாலட்சுமி

**பரிகாரம்:** தினமும் கந்தசஷ்டி கவசம் பாராயணம் செய்வது நல்லது. சனிக்கிழமைகளில் சனி பகவானுக்கு அர்ச்சனை செய்வதும், வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமிக்கு நெய் தீபம் ஏற்றுவதும் சிறந்த பலன்களைத் தரும்.




## கடகம்

கடக இராசி வாசகர்களே!

காரியங்களில் அனுகூலம் உண்டாகும். முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முன்னேற்றத்துக்குத் தடை இருக்காது. புதிய பொருட்களின் சேர்க்கை உண்டாகும். சிலருக்கு பயணங்களும் அதன் மூலம் ஆதாயமும் ஏற்படும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். ஆனாலும் மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் அடிக்கடி வீண் விவாதம், கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றக் கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. மாதத்தின் பிற்பகுதியில் குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் உண்டாகும். பிள்ளைகள் வகையில் பெருமை சேரும். உறவினர்கள் வருகையும், அவர்களால் உதவிகளும் உண்டு. அவர்களில் சிலர் மூலம் ஆதாயம் கிடைப்பதற்கும் வாய்ப்பு உண்டு. அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்து கொள்ளவும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். உடல் நலனில் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ளவும்.

உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். ஆனால், சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள். கூடுமானவரை உங்கள் பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். உயர் அதிகாரிகளுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

தொழில், வியாபாரம் நன்றாகவே இருக்கும். போட்டிகள் குறையும். சக வியாபாரிகள் இணக்கமாக நடந்து கொள்வார்கள். சிலருக்கு வியாபார விடயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது. மாதப் பிற்பகுதியில் அக்கம்பக்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு மனதுக்கு உற்சாகம் தரும். வேலைக்குச் செல்லும் பெண்கள் அலுவலகத்தில் தங்கள் பொறுப்புகளில் கவனமாக இருப்பது மிகவும் அவசியம்.

**சாதகமான நாட்கள்:** ஜன: 19,23, 26,28,31, பெப்: 2,5,7

**சந்திராஷ்டம நாட்கள்:** ஜன 15,16 முற்பகல் வரை பெப் 10 மாலை முதல் 11, 12 முன்னிரவு வரை

**அதிர்ஷ்ட எண்கள்:** 5, 6

**வழிபடவேண்டிய தெய்வம்:** மகாலட்சுமி, வெங்கடாசலபதி

**பரிகாரம்:** விஷ்ணுசஹஸ்ரநாமம் மற்றும் மஹாலக்ஷ்மி அஷ்டகம் பாராயணம் செய்வது நல்ல பலன்களைத் தரும். சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு துளசி அர்ச்சனை செய்வதும் நன்மை தரும்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# சர்வதேச பயங்கரவாத குழுவில் ஹவுதியை பட்டியலிட்ட அமெரிக்கா



(வோஷிங்டன்)
செங்கடல் சர்வதேச வணிகப் பாதையில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு காரணமாகவுள்ள ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்களை சர்வதேச பயங்கரவாத குழுவில் அமெரிக்கா பட்டியலிட்டுள்ளது.

ஏமன் உள்நாட்டுப் போரில் அந்நாட்டின் பெரும் பகுதியை கைப்பற்றிய ஹவுதிகள் ஹமாஸ்களுக்கு ஆதரவாக இஸ்ரேல் துறைமுகத்துக்கு செல்லும் அந்நாட்டுடன் தொடர்புடைய கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தின.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளான கப்பல்களில் பெரும்பாலானவை இஸ்ரேலுடன் தொடர்பு இல்லாதவைகளாகும். இதனால் செங்கடல் வணிகப் பாதையில் அச்சுறுத்தல் ஏற்பட்டது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்தின.

இந்நிலையில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை 'சர்வதேச பயங்கரவாத குழு' என்று அமெரிக்கா பட்டியலிட்டுள்ளதுடன், ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இலக்குகள் மீதான தாக்குதல்களை தொடர்வதாகவும் அறிவித்திருக்கிறது.

ஐரோப்பா - ஆசியா இடையேயான கப்பல் போக்குவரத்தில் 15 சதவீதம் பங்கு வகிக்கும் முக்கிய கடல் வணிகப் பாதையான செங்கடல் பாதையில் இதுவரை 27 இற்கும் அதிகமான கப்பல்கள் மீது ஹவுதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது சர்வதேச அளவில் மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. (நி-5-6)

# படகு கவிழ்ந்ததில் 16 பேர் உயிரிழப்பு

## குஜராத்தில் சோகம்



(டில்லி)
குஜராத் மாநிலம் வதோராவில் உள்ள ஏரியில் சுற்றுலா படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், இரண்டு ஆசிரியர் மற்றும் 14 மாணவர்களென 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

குஜராத் மாநிலம் வதோதரா நகரில் ஹரணியில் உள்ள மோட் நாத் ஏரியில் தனியார் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் படகு சவாரியில் அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் 23 மாணவர்களும் 4 ஆசிரியர்களும் சென்றுள்ளனர்.

அப்போது எதிர்பாராத விதமாக படகு மூழ்கி 2 ஆசிரியர்கள் மற்றும் 14 மாணவர்கள் பலியாகியுள்ளனர். மீட்பு பணி நடைபெற்று வருகிறது.

குஜராத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-5-6)

# காசாவில் 25 ஆயிரத்தை எட்டும் உயிரிழப்புகள்

(ஜெருசலேம்)
காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 24, 620 ஆக அதிகரித்துள்ளது.

இது குறித்து அப்பகுதி சுகா தாரத்துறை அமைச்சகம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, காசாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலில் 24 மணி நேரத்தில் மட்டும் 172 பேர் உயிரிழந்ததுடன் 326 பேர் காயமடைந்துள்ளனர்.

இத்துடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24,620ஆக அதிகரித்துள்ளது. இஸ்ரேல் குண்டு வீச்சில் இதுவரை 61,830 பேர் காயமடைந்துள்ளனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)



# சீன, ரஷ்ய கப்பல்களுக்கு ஆபத்து ஏற்படாது

## ஹவுதி கிளர்ச்சியாளர்கள்

(சனா)
செங்கடல் ஊடாக சீன ரஷ்ய கப்பல்கள் பாதுகாப்பாக பயணிக்கலாம் அந்த நாடுகளின் கப்பல்களை தாக்கப் போவதில்லை என ஹவுதி கிளர்ச்சியாளர்களின் சிரேஸ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடர்ச்சியாக சரக்கு கப்பல்களை தாக்கிவரும் நிலையிலேயே சீன ரஸ்ய கப்பல்கள் தாக்கப்படாது என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் உட்பட சில நாடுகளுடன் தொடர்புபட்ட கப்பல்களை தவிர ஏனைய நாடுகளின் கப்பல்களிற்கு ஆபத்தில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ரஸ்யா சீனா உட்பட ஏனைய நாடுகளின் கப்பல்கள் அந்த பகுதியில் பயணிப்பதால் ஆபத்து எதுவும் ஏற்படாது என அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# ஈரா...

# தொ...

## இரு நாடு...

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் ... தாக்குதலுக்கு பதி... மீது பாகிஸ்தான் வா... ள்ளது. இந்த தாக்கு... களுக்கு இடையே ... ள்ளதுடன் பாகிஸ்த... சூழ்நிலை நிலவுகிற...

பாகிஸ்தானின் தென் மேற்கு பகுதியில் உள்ள பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள பயங்கரவாத அமைப்பை குறி வைத்து ஈரான் இராணுவத்தின் புரட்சிப்படை ஏவுக... கள் ... த்திய...

இ... தனி... முந்...

# புனரமைப்பு ... ஆரம்பித்த ...



(கீவ்)
உக்ரைன் - ரஷ்ய தாக்குதல் காரணமாக சேதமடைந்த கட்டடங்களை புனரமைக்கும் பணிகளை உக்ரைன் ஆரம்பித்துள்ளது.

அதன்படி உக்ரைனின் ட்ரொஸ்டியனெட்ஸ் நகரில் ரயில், பேருந்து நிலையங்களுக்கு இடையிலான இடிபாடுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ான் மீது தாக்குதல் ...ொடுத்த பாகிஸ்தான்

## ...ாடுகளிடையே அதிகரிக்கும் போர் பதற்றம்

**...ாத்)**

**...ரில் ஈரான் நடத்திய ஏவுகணைத் ... பதிலடி கொடுக்கும் வகையில், ஈரான் ...ன் வான்வழி தாக்குதலை மேற்கொண்டு ...ாக்குதல்கள் காரணமாக இரண்டு நாடு ...யே போர் மூளும் அபாயம் ஏற்பட்டு ...கிஸ்தான்-ஈரான் இடையே பதற்றமான ...வுகிறது.**




ஏவுகணை மற்றும் டிரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியிருந்தது.

இந்த வான்வழி தாக்குதலில் 2 சிறுவர்கள் உயிரிழந்ததோடு சிறுமிகள் 3 பேர் காயமடைந்ததாக பாகிஸ்தான் தெரிவித்தது.

இதனை யடுத்து ஈரான் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் எச்சரித்தது மட்டுமன்றி ஈரானுக்கான பாகிஸ்தான் தூதரை திரும்ப பெற்றது.

இந்நிலையில் ஈரான் மீது தாக்குதல் நடத்தி பாகிஸ்தான் பதிலடி கொடுத்துள்ளது.

பாகிஸ்தானின் விமானப்படை ஈரான் உள்ளே புகுந்து நடத்திய இந்தத்தாக்குதலில் பிரிவினைவாத அமைப்புகளின் முகாம்கள் அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் இரு நாடுகளின் எல்லையில் உள்ள ஈரானியர் அல்லாத கிராமவாசிகள் மீது பாகிஸ்தான் அரசு தாக்குதல் நடத்தியுள்ளதாக ஈரான் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் பயங்கரவாத அமைப்பு மீதான தாக்குதலில் ஈரானுக்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது.

அதேவேளை பாகிஸ்தானில் ஈரான் தாக்குதல் நடத்தியதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. (நி-5-6)

## ...ப்பு பணியை ...த உக்ரைன்



அகற்றும் பணியில் அந்நாட்டு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் ரஷ்யாவின் தாக்குதல் காரணமாக ட்ரொஸ்டியனெட்ஸ் நகரம் கடுமையாக சேதமடைந்துள்ளதுடன் அரசாங்க நிதியுதவியுடன் மீண்டும் புனரமைப்பு பணி இடம்பெறவுள்ளாதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## நீருக்கடியில் அணு ஆயுத சோதனை செய்த வடகொரியா

(பியாங்யாங்)

அமெரிக்கா மற்றும் தென்கொரியா மேற்கொண்ட கூட்டு பயிற்சிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் வடகொரியா நேற்று நீருக்கடியில் அணு ஆயுத சோதனைகளை மேற்கொண்டுள்ளது.



உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிற நிலையில் அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து அவ்வப்போது கூட்டு போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன.

இதற்கு பதிலடியாக வடகொரியாவும் தனது இராணுவ வலிமையை காட்டி வருகிறது.

இவ்வாறு மாறி மாறி இரு தரப்பும் தங்கள் வலிமையை காட்டுவதால் பதற்றம் நீடிக்கிறது. சமீபத்தில் அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் கடற்படையினர் ஜேஜு தீவு பகுதியில் கூட்டு பயிற்சியில் ஈடுபட்டனர்.

வடகொரியாவின் ஹைபர்சோனிக் ஏவுகணை சோதனைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த பயிற்சியில் ஈடுபட்டதாக அவர்கள் தெரிவித்தனர். இந்த பயிற்சியில் 3 நாடுகளையும் சேர்ந்த 9 போர்க் கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டன.

அமெரிக்காவின் விமானந்தாங்கி கப்பலான யுஎஸ்எஸ் கார்ல் வின்சன் என்ற கப்பலும் இதில் அடங்கும். இந்த கூட்டு பயிற்சிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் வடகொரியா நீருக்கடியில் அணு ஆயுத அமைப்பை சோதனை செய்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் வைரஸ் காய்ச்சல்

# அவதானத்துடன் செயற்படுங்கள்

## வைத்திய நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் தற்போது இன்புளுவென்சா மற்றும் அதனை ஒத்த வைரஸ் காய்ச்சல் அதிகம் பரவுகிறது.**

இதன் அறிகுறிகளாக காய்ச்சல், இருமல், தொண்டைப்புண், சளி அல்லது அடைப்பு, தசை அல்லது உடல் வலி, தலைவலி மற்றும் சோர்வு போன்றவைகள் ஏற்படலாம்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு வைரஸ் நோய்கள் தொடர்பான சுகாதார வைத்திய நிபுணர் வைத்தியர் ஜூட் ஜயமஹா பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

குறிப்பாக நவம்பர் முதல் பெப்ரவரி மாதம் வரையிலும் மற்றும் ஏப்ரல் முதல் ஜூலை மாதம் வரையிலும் இரண்டு காலகட்டங்களில் இன்புளுவென்சா வைரஸ் பரவும்.

கடந்த டிசெம்பர் மாதம் மற்றும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் பரிசோதனைகளில் முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு 25 சதவீதம் பேருக்கு இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்கள், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள், 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள் மற்றும் நாட்பட்ட நோய்கள் உள்ளவர்கள் இன்புளுவென்சா போன்ற நோய்களால் பாதிக்கப்படக்கூடியவர்களாவர்.

எனவே, இருமல் இருப்பவர்கள் மற்றவர்களுக்கு பரவுவதை தடுக்க முகக்கவசம் அணிய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# டிஜிட்டல் தேசிய அடையாள அட்டை விநியோகிக்க நடவடிக்கைகள் விரைவில்

(கொழும்பு)

இலங்கையில் டிஜிட்டல் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜி.பிரதீப் சபுதந்திரி தெரிவித்தார்.

இதற்காக முக அடையாளம் மற்றும் கைரேகை தரவுகள் சேகரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த வேலைத்திட்டம் இவ்வருடம் பெப்ரவரி மாதத்திற்குள் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடமேல் மற்றும் மத்திய மாகாண அலுவலகங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதால், தேசிய அடையாள அட்டைகளின் ஒரு நாள் சேவைக்காக பொது மக்கள் கொழும்புக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

குடிமக்களின் தரவுகள், கைரேகைகள் மற்றும் முகத்தை அடையாளம் காணுதல் தொடர்பான தரவுகள் சேகரிப்பு அனைத்து பிராந்திய செயலகங்கள் ஊடாக எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஐ.நா பிரதிநிதிகளுடன் அதிகாரிகள் சந்திப்பு



(அக்கராயன்)

மீள் குடியேற்றத்திற்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் (ஐ.ஓ.எம்) பிரதிநிதிகளுக்கும் கிளிநொச்சி மாவட்டச் செயலக அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் உள, சமூக, வாழ்வாதாரமேம்பாடு, இழப்பீடுகள் தொடர்பான கடந்தகால மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

மேலும் மாவட்டத்தில் ஐ.ஓ.எம் நிறுவன பங்களிப்புடன் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியதுடன் எதிர்காலத்தில் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி இ.நளாஜினி, ஐ.ஓ.எம் நிறுவன பிரதிநிதிகள் மற்றும் விடயத்தோடு தொடர்புடைய மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (நி-5-6-350)

# இன்று ஒரு தகவல்

11

தென்கச்சி கோசுவாமிநாதன்

# சிக்கனமும் கருமித்தனமும்

சிக்கனமாயிரு...ஆனால் கருமியாய் இருக் காதே! நபிகள் நாயகம் போதனைகளிலே இது வும் ஒன்று. ஒரு சமயம்... எம் பெருமானார், நபிகள் நாயகம் அவர்களிடம் ஒரு பெரியவர் வந்தார். "எங்கள் ஊரில் பள்ளிவாசல் இல்லை... அதை எப்படியாவது கட்ட வேண்டும். அதுக்குப் பணம் தேவை... என்ன செய்யலாம்? என்று யோசனை கேட்டார்.

அதுக்கு நபிகள் நாயகம் கூறினார் "பக்கத்து ஊரில் ஒரு செல்வந்தர் இருக்கிறார். அவர் பெயர் இன்னது... அவரிடம் போய் கேளுங்கள் கொடுப்பார்" என்றார். உடனே அந்தப் பெரியவர் அடுத்த ஊருக்கும் போனார். அந்தப் பணக்காரரைப் பார்த்தார்.

அவருக்கு பெரிய அதிர்ச்சி! ஏன் தெரியுமா? இவர் அங்கே போன நேரத்தில் அந்த பணக்காரர் ஒரு ஆளை தூணிலே கட்டிவைத்து அவன் முகத்திலே குத்திக் கொண்டிருந்தார்! அதைப் பார்த்த இந்த பெரியவர் பக்கத்திலே இருந்தவர்களிடம் ஏன் இவர் அப்படி அவ ருடைய முகத்திலே குத்திக்கொண்டிருக்கிறார் என்று கேட்டார். அந்தப் பணக்காரர் அவரை கடைக்குப் போய் பருப்பு வாங்கிக் கொண்டு வரச் சொன்னார். வாங்கி கொண்டுவரும் வழியில் பத்து பருப்பு சிந்திப் போய் விட்டது. அதற்காக பத்து குத்து குத்திக்கொண்டு இருக்கிறார்.

ஒரு பருப்புக்கு ஒரு குத்து வீதமாக கணக்குப் பண்ணி குத்திக்கொண்டு இருக்கிறார். அப்படி என்று சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான்... பணம் கேட்பதற்கு வந்தவர் பயந்து போய் ஓட்டம் பிடித்தார்.

மறுபடியும் நபிகளிடம் வந்து நின்றார். பணக்காரர் என்ன கொடுத்தார் என்று கேட்ட தற்கு, குத்துதான் கொடுத்தார் என்று ஆரம்பித்து விபரத்தை கூறியிருக்கிறார்.

நபிகள் நாயகமோ மறுபடியும் அவரிடம் போய் கேள்! அப்படி என்று கட்டளையிட்டார். இவர் மறுபடியும் அவரிடம் போனார். இந்த தடவை என்ன நடந்து கொண்டிருந்தது தெரியுமா? அந்தப் பணக்காரர் இன்னொருவரை ஒரு மரத் தில் கட்டி வைத்து சாட்டையாலே அடித்துக் கொண்டிருந்தார்.

இந்த பெரியவர் அங்கே இருந்தவர்களிடம் ஏன் இப்படி? என்று கேட்டார். அவர்கள் சொன் னார்கள் அந்த மனிதன் எண்ணெய் வாங்கிக் கொண்டு வரப்போனான். வரும் வழியில் பத்து சொட்டு எண்ணெய் கீழே சிந்திப் போய் விட்டது. அதற்காக பத்து சவுக்கடி கொடுக்கிறார்! சொட்டுக்கு ஒரு அடி கணக்கு! அப்படி என்றார்கள்.

வந்த பெரியவருக்கு வாழ்க்கையே வெறுத்து விடும் போல ஆகிவிட்டது. இந்த கருமியிடம் பணம் கேட்பதை விட பள்ளி வாசல் கட்டுவ தையே நிறுத்துவது நல்லது என்று நினைத்தார்.

இவரிடம் நன்கொடை கேட்பதற்கு போய் அவரும் 10 ரூபாய் பணத்தை கொடுத்துவிட்டு ரூபாய்க்கு ஒரு குத்துன்னு முகத்திலே குத்திக் கொண்டிருந்தார் என்றால் யாரு தாங்கிறது? நினைத்துப் பார்த்தார். மறுபடியும் ஓட்டம் பிடித்தார். நபிகளிடம் வந்து நின்றார். செல்வந்தர் என்ன கொடுத்தார்? என்றார். சவுக்கடி என்றார் இவர். விபரத்தையும் சொன்னார்!

மறுபடியும் போய்க் கேள் என்று உத்தரவு போட்டார் நபிகள் நாயகம். பெரியவர் மறுபடி யும் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு அந்த பணக்காரரிடம் போனார். நல்ல வேளையா இந்த தடவை அங்கே எதுவும் நடக்கவில்லை. பெரிய வர் துணிந்து அவரிடம் நெருங்கிப் போனார். வந்த காரியத்தைப் பற்றி சொன்னர்.

எவ்வளவு ரூபாயிலே பள்ளிவாசல் கட்டப் போறீங்க என்று அந்த செல்வந்தர் கேட்டார். அதைக் கட்டி முடிக்க பத்தாயிரம் ஆகும். நீங்க ஒரு ஐயாயிரம் கொடுத்தால் மற்றவர்களிடம் ஐயாயிரம் வாங்கலாம் என்றார் இவர்.

அதுக்கு அந்தப் பணக்காரர் சொன்னார். இவ்வளவு காலம் உங்க ஊரிலே பள்ளிவாசல் இல்லாமல் இருந்ததே தவறு. இதில் இன்னமும் பலபேரிடம் போய் நன்கொடை கேட்டுக்கொண்டு காலம் கடத்த வேண்டாம். நானே பத்தாயிரமும் தருகி றேன். இதற்கு உதவாத பணம் எதற்காக என்னி டம் இருக்க வேண்டும் என்று சொல்லி உடனே பணத்தை அள்ளிக்கொடுத்தார்.

பெரியவருக்கு தலை சுற்ற ஆரம்பித்து விட் டது. ஒரே குழப்பம்! நபிகளிடம் வந்தார். பத்து பருப்பு சிந்தினதற்காக பத்து குத்து குத்தினவர். பத்து சொட்டு எண்ணெய் சிந்தினதுக்காக பத்து சவுக்கடி கொடுத்தவர்- பள்ளிவாசல் கட்ட ஐயாயிரம் கேட்டால் பத்தாயிரம் கொடுக்கி றாரே. இது எப்படி? என்று கேட்டார்.

இப்பத்தான் நபிகள் நாயகம் இதற்கு விளக்கம் கொடுக்கிறார். கருமித்தனம் என்பது வேறு! சிக்கனம் என்பது வேறு!

அவர் கருமியில்லை. சிக்கனத்தை கையாளுபவர்! அவர் சிக்கனமாயிருந்து சேர்த்து வைத்ததனாலேதான் அந்தப் பணம் பள்ளிவாசல் கட்ட பயன்படு கிறது என்றார்.

நபிகள் நாயகம் அவர்களுடைய இந்த வாக்கு தான் கருமித் தனத்துக்கும் சிக்கனத்துக்கும் உள்ள இடைவெளியை நமக்கு புரிய வைக்குது!

இந்த நேரத்திலே நான் ஒன்று சொல்ல ஆசைப் படுகிறேன். இந்த தகவல் குடும்பத் தலைவிகள் பலபேர் காதிலே விழுந்திருக்கும்! குடும்பத் தலைவர்கள் மேலே எனக்கு அனுதாபம் அதிகமா இருப்பதனாலே ஒன்று சொல்லி வைக்கிறேன்.

இனியும் நீங்க கடைக்குப் போய் பருப்பு வாங்கிக் கொண்டு வரும் சந்தர்ப்பம் ஏற்படலாம். அப்படி வாங்கிக்கொண்டு வரும் வழியிலே ஏதாவது சிந்தினால் எத்தனைப் பருப்பு சிந்திப் போனது என்ற விவரத்தையெல்லாம் ... வெகுளித்தனமா சொல்லிக்கொண்டிருக்காதீங்க. ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்காது!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி வேலைத்திட்ட மீளாய்வு கலந்துரையாடல்

## முல்லை மாவட்ட செயலகத்தில்

(நெளுக்குளம்)

அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடலானது நேற்று முன்தினம் முல்லை மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் 2023 ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் பற்றியும் அவை தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

மேலும் 2024 ஆம் ஆண்டுக்குரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் அவற்றை எவ்வாறு சிறப்பான முறையில் மேற்கொள்வது என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், பிரதம உள்ளக கணக்காய்வாளர் க.லிங்கேஸ்வரன், சமுர்த்தி பணிப்பாளர் எம். முபாரக், பதில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. க.ஜெயபவானி, பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள்எனபலரும்கலந்துகொண்டனர். (நி-5-6-299-350)



# திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு, விநாயகபுரம் ஒட்டங்குளம் பாணலிங்கேஸ்வர அருள்மிகு நர்மதா நதீஸ்வரர் சிவன்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

அதனைமுன்னிட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 வரை எண்ணெய்க் காப்பு, பால்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளன.

மறுநாள் புதன்கிழமை காலை 5 மணி தொடக்கம் 6.30 வரையுள்ள சுப வேளையில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு நடைபெற்று அன்றைய தினம் நான்கு திக்கு இராஜ கோபுரங்களுக்கும் அடிக்கல் நாட்டுவிழா இடம் பெறவுள்ளது. (நி-5-6)




# 24 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் மன்னாரில் ஒருவர் கைது

(நெளுக்குளம்)



மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள காணி ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் மாலை ஒரு தொகுதி போதை மாத்திரைகள் மீட்கப்பட்டதோடு, சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள காணி ஒன்றில் போதை மாத்திரைகள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளதாக தாழ்வுபாடு கடற்படைக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கடற்படையினருடன் , தலை மன்னார் போதைப் பொருள் குற்றத்தடுப்பு பிரிவினர் இணைந்து குறித்த பகுதியில் உள்ள காணியை சோதனையிட்ட வேளை பதுக்கி வைக்கப்பட்டிருந்த 150 மில்லி கிராம் எடை கொண்ட 24 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதோடு சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் மீட்கப்பட்ட போதை மாத்திரைகளும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேக நபர் மற்றும் மீட்கப்பட்ட போதை மாத்திரைகள் என்பவற்றை மன்னார் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளனர். (நி-5-6-285)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3020

மாதுரி | வைசாலினி | மிதுனா










சாத்விகன் | மோகிதன் | கைலேஷ்










நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பொன்னான facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 383



"அடடே! உனக்குத் தெரிந் திருக்கிறதே! இதோ உன் சிநேகிதன் இவ்வளவு பத்தி ரமாக கொண்டுவந்து ஒப்பு வித்தானே, இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறதென் றும் உனக்குத் தெரியும் போலி ருக்கிறது?"

"தங்களை உடனே பழை யாறைக்கு வந்து சேரும்படி தங்கள் தமக்கையார் எழுதி யிருக்கிறார்கள். இளவரசே! குந்தவை தேவி அந்தரங்க மாக இந்த ஓலையை எழுதி நம் வாணர்குல வீரரிடம் கொடுத்த போது பக்கத்தி லிருந்த கொடி வீட்டில் மறைந்திருந்து நான் பார்த் துக் கொண்டிருந்தேன்."

திருமலைக்குப் பின்னா லிருந்த வந்தியத்தேவன் அவ னுடைய முதுகில் அழுத்த மாகக் கிள்ளினான்.

ஆழ்வார்க்கடியான் தன் முதுகில் ஓங்கி அறைந்து, "இது பொல்லாத காடு. இரவு நேரத்திலே கூட வண்டு கடிக் கிறது!" என்றான்.

இளவரசர் சற்றுக் கோபத் துடன், "சேச்சே! இது என்ன வேலை? என் அருமைத் தமக் கையார் பேரிலேயே நீ உன் திறமையைக் காட்டத் தொடங் கிவிட்டாயா?" என்றார்.

"அதை நான் பார்த்திருந்த படியினால்தான் இவனை இவ்வளவு பத்திரமாக இங்கே கொண்டுவந்து சேர்த்தேன். இளவரசே! இவனை வழியி லெங்கும் சங்கடத்தில் மாட் டிக் கொள்ளாதபடி காப்பாற் றிக் கொண்டு வருவதற்கு நான் பட்ட பாட்டைப் புத்த பகவானே அறிவார்.

அநுராதபுரத்தின் வழி யாக வந்திருந்தால் இவன் நிச்சயமாக இங்கு வந்து சேர ந்திருக்க மாட்டான். வழி யில் யாருடனாவது சண்டை பிடித்துச் செத்தி ருப்பான். அதனாலே காட்டு வழியாக அழைத்து வந்தேன். அங் கேயும் இவன் ஒரு மதயானை யுடன் சண்டை பிடிக்கப் பார் த்தான். என்னு டைய கைத் தடியால் அந்த மதயானை யைச் சம்ஹரித்து இவனைத் தங்களிடம் பத்தி ரமாய்க் கொண்டு வந்தேன்!" என றான்.

"ஓஹோ! அப்படியானால் இவனைப் பத்திரமாகக் கொண்டு வந்து என்னிடம் சேர்ப்பதற்காகவே நீ இலங் கைக்கு வந்தாயா, என்ன?"

"இல்லை, ஐயா! என் பங் குக்கு நானும் தங்களுக்கு ஒரு செய்திகொண்டு வந்திருக் கிறேன்."

"அது என்ன? சீக்கிரம் சொல்!" என்றார் இளவர சர்.

"முதன் மந்திரி அநிருத்தர் தாங்கள் இலங்கையிலேயே இன்னும் சிறிது காலம் இருப் பது உசிதம் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார்."

"இப்படி மூன்று மூத்த வர்கள் மூன்று விதமாகச் செய்தி அனுப்பினால் நான் எதையென்று கேட்பது?" என்றார் அருள்மொழிவர் மர்.

இச்சமயத்தில் வந்தியத் தேவன் குறுக்கிட்டு, "இள வரசே! மன்னிக்க வேண் டும்! தாங்கள் கேட்க வேண் டியது தங்கள் தமக்கையா ரின் வார்த்தையைத்தான்!" என்றான்.

"ஏன் அவ்விதம் சொல்லு கிறீர்?"

"ஏனெனில், தங்கள் தமக் கையின் வார்த்தைக்கே மதி ப்புக் கொடுக்க வேண்டும் என்று தங்கள் இருதயம் தங்களுக் குச் சொல்கிறது. அப்படித் தாங்கள் அவர் வார்த் தையைக் கேட்கா விட்டாலும் நான் கேட்டே தீர வேண்டும்.

தங்களை எப்படியும் அழை த்துக் கொண்டு வரும் படி யாக இளைய பிராட்டி என க்குப் பணித்திருக்கிறார்!" என்றான் வந்தியத்தேவன்.

இளவரசர் வந்தியத்தே வனை ஏற இறங்கப் பார்த் துவிட்டு "இத்தகைய ஒரு வீரத்தோழன் கிடைக்க வேண் டுமேயென்று எத்தனையோ நாளாக நான் தவம் செய்து கொண்டி ருந்தேன்!" என் றார். (தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

## நாத்திகன் பட்ட அவஸ்தை



முல்லா வசித்து வந்த ஊரில் ஒரு நாத் திகன் வசித்து வந் தான்.

கொஞ்சமும் தெய்வ நம்பிக்கை இல்லா தவன். தெய்வ நம்பி க்கை உடைய முல்லா போன்றவர் களை எப்பொழுது பார் த்தாலும் கேலியும் கிண்டலும் செய்து பரிகசித்துக் கொண் டிருப்பான்.

ஒரு நாள் சந்தைத் திடலில் அந்த நாத் திகன் நின்று கொண் டிருந்தான்.

அந்தப் பக்கமாக முல்லா நடந்து வந்து கொண்டிருந்தார். அங்கே திரளாகக் கூடி யிருந்த மக்களுக்கு மத் தியிலே முல்லாவை அவமானப்படுத்த வேண்டும் என்று எண் ணினான்.

முல்லா அருகே வந் ததும், "முல்லா அவ ர்களே உலகத்தி லேயே நீங்கள்தான் முற்றும் துறந்த துறவி என்று மக்கள் பேசிக் கொள்கிறார்களே? அப் படி எதை நீர் துறந்து ஞானியானீர்" என்று நாத்திகன் கேலியாகக் கேட்டான். "எந்த முட்டாள் அந்த மாதிரி சொன்னான் என்னை விட மிகவும் மகத்து வம் வாய்ந்த துறவி ஒருவர் இருக்கிறாரே!" என்றார் முல்லா.

நாத்திகனுக்கு மட்டு மல்ல அங்கு நடமா டிக் கொண்டிருந்த மக் களுக்கும் முல்லா சொன்ன தகவல் ஆச்ச ரியத்தை விளைவித் தது. முல்லாவையும் விட மேலான தறவி இந்த ஊரில் யார் இரு க்க முடியும் என்று அவர் களுக்கு விளங்கவில்லை.

நாத்திகனும் அந்தத் தகவலைக் கேட்டு வியப் படைந்து "முல்லா இந்த ஊரில் உள்ள அந்த மகத்துவம் வாய்ந்த துறவி யார்?" என்ற கேட்டான்.

"அந்தத் துறவி நீர் தான் " என்று முல்லா கூறியதைக் கேட்ட நாத்திகன் அதிர்ச்சி யடைந்து விட்டான். "நானா அந்தத் துறவி அது எப்படி?" என்று கேட்டான்.

"என்னைப் போன்ற சாதாரணத் துறவி கள் கேவலம் உலகத் தில் இருக்கும் பொரு ட்களைத் தான் துறப் பது வழக்கம். நீரோ கடவுளையே துற ந்து விட்ட துறவியா யிற்றே உம்மை மிஞ் சக் கூடிய துறவி உல கத்தில் ஏது?" என்று முல்லா பதிலளித் தார். அங்கே சூழ்ந் திருந்த மக்கள் நாத் திகனைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்க ஆரம்பித்தனர். நாத் திகன் தலைகுனிந்த வாறு அந்த இட த்தை விட்டு வேக மாக அகன்று விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர் வழியில் அடைய முடியாததை ஒருநாளும் குறுகிய வழியில் அடைந்துவிட முடியாது.
– கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வட மாகாணத்தில் நடந்தேறிய அறிவுபூர்வமற்ற நிர்மாணப் பணி

இலங்கையில் அதிகளவு டெங்குக் காய்ச்சல் பதிவாகிய மாகாணமாக வடக்கு உள்ளது.

வட மாகாணத்திலும் யாழ்ப்பாணத்திலேயே டெங்குத் தொற்றுக்கு ஆளானவர்கள் அதிகம் என்பது வேறு கதை.

நிலைமை இதுவாக இருக்கையில், வட மாகாணத்தில் டெங்குத் தொற்று இந்தளவு தூரம் விஸ்வரூபமெடுத்து ஆடுவதற்கு என்ன காரணம் என்றறியும்போது, நுளம்புப் பெருக்கம் அதிகம் என்பது தெரியவரும்.

இவ்வாறு நுளம்புப் பெருக்கத்துக்கு தண்ணீர் தேங்கி நிற்கின்றமை மூலகாரணமாக அமைகிறது.

ஆக, வட மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தண்ணீர் தேங்கி நிற்கின்ற இடங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதெனும்போது, எங்கோ பிரச்சினை உண்டென்பது புரிதற்குரியது.

ஆம், வட மாகாணத்தில் அமைக்கப்பட்ட வீதிகளும் மற்றும் புகையிரதப் பாதைகளும் வடிகால் நிர்மாணமும் தண்ணீர் தேங்கி நிற்கின்ற ஏதுக்களை அதிகரித்துள்ளன.

உண்மை. காப்பற் வீதிகளையும் புகையிரதப் பாதைகளையும் மிகவும் உயரமாக அமைத்துவிட, வீதி ஓரங்களிலும் வீட்டு வளவுகளிலும் தண்ணீர் தேங்கலாயின.

தவிர, வீதிகளுக்குக் குஞ்சம் கட்டியதுபோல அமைக்கப்பட்ட வடிகால்கள் தண்ணீரைத் தேக்கி வைக்கின்ற இடங்களாகவும் வெறுந் தண்ணீர் போத்தல்கள் மற்றும் சொப்பிங் பைகளைக் கொட்டுகின்ற இடங்களாகவும் இருக்க, நுளம்புகள் தாராளமாகப் பெருகலாயின.

இதன் விளைவாகவே வட மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நுளம்பு பெருக்கம் தாராளமாகி டெங்குக் காய்ச்சல் எங்கும் பரவிக் கிடக்கிறது.

என்ன செய்வது டெங்குக் காய்ச்சல் காரணமாக அருமந்த உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பணியாளர்கள் வீடுகள் தோறும் சென்று இடங்களைப் பார்வையிட்டு பதிவு செய்கின்றனர்.

ஆனால் வடிகாலில் தேங்கி நிற்கின்ற தண்ணீரைக் கவனிக்கவும் அவற்றைத் துப்புரவு செய்யவும் தேங்கி நிற்கும் தண்ணீரில் கழிவு ஒயிலை ஊற்றி நுளம்பு பெருகாமல் தடுக்கவும் வேண்டிய பணிகள் கிடப்பில் கிடக்கின்றன.

இங்குதான் வீடுகளுக்குச் சென்று நுளம்பு பெருகுகின்ற இடங்களைத் தேடுவதால் உச்ச நன்மை ஏற்படப் போவதில்லை.

ஆக, அறிவார்ந்த முறையில் கட்டுமானப் பணிகளும் வீதி அமைப்புகளும் மேற்கொள்ளப்படாததன் காரணமாக வட மாகாணத்தில் டெங்குத் தொற்று சன்னதமாடுகிறது.

தானாக ஆடி அசைந்து ஓடிய மழை வெள்ளத்துக்கு, எந்தவித ஆராய்வும் இல்லாமல் வடிகால் கட்டியபோது எல்லாம் அம்போ என்றாயிற்று.

ஒட்டுமொத்தத்தில் எங்கள் வடபுலத்தில் நடந்த – நடக்கின்ற கட்டுமானப் பணிகளும் நிர்மாணப் பணிகளும் மோசமாகிப் போன தன் விளைவுகளில் ஒன்றுதான் இலங்கையில் நாம் முதலிடம் பிடித்துக் கொண்ட டெங்கு.

# சர்வதேச தரத்திற்கு ஏற்ப இலங்கையில் புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும்

## நீதி அமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

சர்வதேச தரத்திற்கு ஏற்ப இலங்கையில் புதிய சட்டங்களை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் மார்க் - ஆன்ட்ரே- பிரான் சேவிற்கும் நீதி அமைச்சருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று நீதியமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கையின் நீதிச் செயற்பாட்டை வலுப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் கொண்டுவரப்படும் என்றும் விஜயதாச ராஜபக்ச இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவ்வாறு கொண்டுவரப்படுகின்ற புதிய சட்டங்கள், சர்வதேச தரத்திற்கு ஏற்பவும் வெளிப்படைத்தன்மையை பாதுகாக்கும் அடிப்படையிலும் உருவாக்கப்படுமென அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளதாகவும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கான இலங்கையின் முயற்சிகளில் ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகள் மிகவும் முக்கியமானவை எனவும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும் ஐக்கிய நாடுகளின் மனநல ஆணைக்குழுவின் அனுபவம் தொடர்பிலும் இதன்போது கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

# யாழ். நகரில் கடைகள் எரிக்க

## பெல்ஜியத்திலிருந்து ரூ. 12 இலட்சம் கூலி

## மூவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ. நகரில் கடைகள் எரிக்க பெல்ஜியத்திலிருந்து 12 இலட்சம் ரூபா கூலியாக வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சந்தேகத்தில் மூவர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

யாழ் நகரப்பகுதியில் உள்ள இரண்டு கடைகள் அண்மையில் எரிக்கப்பட்டன.

2 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் இதன்போது எரிந்தன.

அத்துடன் கார் ஒன்றும் எரிக்கப்பட்டது. மேலும் மோட்டார்சைக்கிள் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் நேற்று முன்தினம் மூன்று பிரதான சந்தேகநபர்களைக் கைது செய்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள், ஒரு வாள் என்பன மீட்கப்பட்டன.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேகநபர் ஒருவருக்கு பெல்ஜியத்திலிருந்து விடுக்கப்பட்ட உத்தரவுக்கு அமையவே இந்த விஷமச் செயலில் அவர்கள் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடைகளை எரிப்பதற்காக 12 லட்சம் ரூபா பணமும், வாகனங்களை எரிப்பதற்காக 7 லட்சம் ரூபா பணமும் பெல்ஜியத்தில் இருக்கும் நபரிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுவதற்கு வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஒன்றரை லட்சம் ரூபா பணமும் அவர்களுடைய வங்கிக் கணக்குக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து குற்றச் செயல்களின் சூத்திரதாரியான பெல்ஜியம் வாழ் நபரை இன்டர்போலின் உதவியுடன் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## சீனத் தூதுவர் – சபாநாயகர் சந்திப்பு

## 'ஒரே சீனா' கொள்கைக்கு இலங்கை வழங்கிய ஆதரவுக்கு பாராட்டு

இலங்கைக்கான சீன தூதுவர் Qi Zhenhong மற்றும் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருக்கிடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவும் கலந்து கொண்டுள்ளார்.

இரு தரப்புக்கும் இடையிலான இந்த சந்திப்பில் 'ஒரே சீனா' கொள்கைக்கு இலங்கை வழங்கிய ஆதரவை பாராட்டுவதாக சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, அரசாங்கம் என்ற ரீதியில் இலங்கை எப்பொழுதும் 'ஒரே சீனா' கொள்கையை ஏற்றுக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கொழும்பு துறைமுக நகரத்திட்டம் உட்பட இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீன முதலீடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (ம-7)

# திறப்பு விழா

(இளவாலை)

இளவாலை மக்கள் ஒன்றியத்தின் பிரதான நிதிப் பங்களிப் புடனும் வைத்தியர் மோகன் அவர்களது ஞாபகார்த்தமாக அவரது நண்பர்கள் உறவினர்களது நிதிப் பங்களிப் புடனும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வைத்தியர் மோகன் ஞாபகார்த்த உள்ளக விளையாட்டரங்கின் அங்குரார்ப்பண திறப்பு விழாவானது இன்று 20.01.2024 சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந் நிகழ்வினை தொடர்ந்து மதிய விருந்துபசாரமும் இடம்பெறவுள்ளது.

இவ் விளையாட்டரங்கின் வைவரீதியான திறப்பு விழாவானது எதிர்வரும் 27.01.2024 சனிக்கிழமை இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

# சுதந்திர பாலஸ்தீனம் நிறுவப்பட வேண்டும்

## அணிசேரா நாடுகளின் மாநாட்டில் ரணில்

மேற்குக்கரை காசா மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளை பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியாக அங்கீகரிப்பதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

உகண்டாவில் இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் அரசாங்கத்தின் 19ஆவது உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) தீர்மானங்கள் மற்றும் அணிசேரா இயக்கத்தின் (NAM) பிரகடனத்துடன் இஸ்ரேல் இணங்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

காசாவின் இன அமைப்பில் எந்த மாற்றமும் இருக்கக்கூடாது. ஐந்து ஆண்டு களுக்குள் பாலஸ்தீன அரசு நிறுவப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

04

இவ் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கோட்டை மன்னனுக்கும் போர்த்துக்கேயருக்குமிடையே நட்புறவுக்கும் வர்த்தகத்திற்குமான ஒப்பந்தம் போர்த்துக்கேயம், சிங்களம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டு கைச்சாத்திடப்பட்டது.

போர்த்துக்கேயர் தமது இலங்கைக்கான வருகையின் நினைவுச் சின்னமாகவும் எதிர்கால உறவுகளை வளர்ப்பதையும் நோக்காகக் கொண்டு கோட்டை மன்னனின் அனுமதியுடன் துறைமுகத்துக் கண்மையில் ஒரு சிற்றாலயத்தை அமைத்தனர். இவ்வாலயம் படைத்தலைவன் லொறன்ஸோடீ அலமெய்டாவின் பாதுகாவலரான புனித லோறன்ஸ் பெயருக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இவ்வாலயத் திற்கு அருகாமையில் ஒரு களஞ்சிய சாலையும் அமைக்கப்பட்டது.

ஆன்மகுரு பிறேவி சன்ரி அடிகள் இலத்தீன் மரபிலான திருப்பலியை இலங்கையில் முதன் முதல் ஒப்புக் கொடுத்தார். இதுவே இலங்கைத் திருச்சபையின் வரலாற்றின் ஆரம்பம் என சில வரலாற்று ஆசிரியர்கள் கணிக்கின்றார்கள். போர்த்துக்கேயர் தமது இலங்கைக்கான வருகையின் நினைவுச் சின்னமாக துறைமுகத்திலுள்ள ஒரு பாறையில் தமது நாட்டின் இலக்கியச் சின்னத்தைச் செதுக்கினர்.

படையினரின் ஆன்ம குரு விசன்ரி இலங்கையிலேயே தங்கி மறைபரப்புப் பணியை மேற்கொள்ள விரும்பினாலும் கோட்டை மன்னனுடன் உரிய நட்பை ஏற்படுத்துவதற்கு முன்பு மதப்பிரசாரம் செய்வது எதிர்காலத்திட்டங்களைப் பாதிக்கலாம் எனக் கருதி போர்த்துக்கேய சிவில் அதிகாரிகள் மதப்பிரசாரத்தைத் தடுத்தனர்.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்து, கோட்டை மன்னனுடன் ஒப்பந்தம் செய்து கொழும்புத் துறை முகத்தில் ஆயுதப் பாதுகாப்புடனான களஞ்சியசாலையை அமைத்தமை இஸ்லாமியர் ஏற்கனவே போர்த்துக்கேயர் மீது கொண்டுள்ள வெறுப்பையும் சினத்தையும் அதிகரித்து, போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்படும்படி மன்னனையும் மக்களையும் இஸ்லாமியர் தூண்டினர். இதனால் போர்த்துக்கேயர் கோட்டை அரசில் நிலை கொள்வது கடினமாயிற்று.

### கொழும்பிலுள்ள போர்த்துக்கேயரின் களஞ்சியசாலை அழிப்பு

இப்பின்புலத்திலேயே இந்தியாவிலுள்ள போர்த்துக்கேய ஆளுநரின் பணிப்பில் கொழும்பிலுள்ள போர்த்துக்கேயரின் களஞ்சியசாலை அழிக்கப்பட்டு இலங்கையில் தங்கவிடப்பட்ட படையினரும் மீண்டும் இந்தியாவிற்கு அழைக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து 1518ஆம் ஆண்டு வரை போர்த்துக்கேயக் குருக்கள் எவரும் இலங்கைக்கு வந்தமைக்கோ, அல்லது இலங்கையில் மறைப் பணியாற்றியமைக்கோ எந்தவித சான்றும் கிடைத்ததில்லை. எனினும் இந்தியாவிலுள்ள போர்த்துக்கேய ஆளுநர் வருடாவருடம் புரட்டாதி மாதத்தில் தனது படையினரை அனுப்பி கோட்டை மன்னனிடம் திறை பெற்று வந்துள்ளான்.

### போர்த்துக்கேயர் கொழும்பில் மீண்டும் ஒரு கோட்டையை அமைத்தல்

போர்த்துக்கல் மன்னன் டொம் மனுவல் இந்தியாவின் 3ஆம் ஆளுநரான கலோப் போசு வாறஸ்டீ அல்பெக்காரியா என்பவனை நியமித்தான். இந்து சமுத்திரத்தில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்த போர்த்துக்கல் மன்னன் 1515 இல் கொழும்பில் ஒரு நிரந்தரமான கோட்டையை அமைக்கும் படி தனது இந்திய ஆளுநனைப் பணித்தான். 1517 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ஆம் திகதி லோப்போசு வாறஸ்ட அல்பேக்காரியா என்பவன் களஞ்சிய கட்டுமானப் பணிக்கான உபகரணங்களுடனும் 17 கடற்கலங்களுடனும் 850 படைவீரர்களுடனும் இலங்கைக்கான தனது பயணத்தை ஆரம்பித்தான்.

போர்த்துக்கேயர் கோட்டை அமைக்கும் பணியில் இஸ்லாமியரதும் இஸ்லாமியரால் தூண்டப் பெற்ற மக்களினதும் எதிர்ப்புக்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. பல எதிர்ப்புக்கள் மத்தியிலும் போர்த்துக்கேயர் கொழும்பில் ஒரு கோட்டையை, நிறுவி கோட்டை மன்னன் 9ஆம்தர்மபராக்கிரமபாகுவுடன் முதலில் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொண்டனர்.

இதன்படி வருடாவருடம் கோட்டை மன்னன் போர்த்துக்கேயருக்கு 400 பஹார்கறுவாயும் மாணிக்கக் கற்கள் பதித்த 20 மோதிரங்களையும் 10 யானைகளையும் திறையாக வழங்குவதெனவும் போர்த்துக்கேயர் கோட்டை மன்னனின் துறைமுகங்களை எதிரியின் தாக்குதல்களில் நின்று காக்க வேண்டுமெனவும் உடன்பாடு காணப்பட்டது.

1517 ஆம் ஆண்டு கோட்டை மன்னனின் அரண்மனையில் எழுபது போர்த்துக்கேயர்கள் ஆயுதங்கள் அற்றவர்களாகவே இருந்ததாக அறியப்படுகின்றது. இவர்களில் பலர் சுகவீனர்களாகவும் வயது முதிர்ந்தவர்களாகவும் காணப்பட்டனர். 1518 ஆம் ஆண்டிலிருந்தே போர்த்துக்கேயப் படை வீரரினதும் அதிகாரிகளினதும் ஆன்மிகத் தேவைகளை நிறைவு செய்ய பிரான்சிஸ்கன் சபைக்குரு ஒருவர் இலங்கையில் நிரந்தரமாகத் தங்கியிருந்து பணியாற்றினார். இவர் சுதேசிகள் மத்தியிலும் சிறிய அளவிலான மதமாற்றப் பணியில் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கோட்டையில் கிறிஸ்தவம் பரப்பப்பட வேண்டும் என்பது பற்றி போர்த்துக்கல் மன்னன் டொம் மனுவல் உறுதியாக இருந்தான் என்பதை 5ஆம் திகதி பங்குனி மாதம் 1521ஆம் ஆண்டு போர்த்துக்கல் மன்னன் இலங்கையிலுள்ள போர்த்துக்கேயரின் தலைவனுக்கு எழுதிய மடலில் இருந்து அறியக் கூடியதாயுள்ளது. இம்மடல் வழியாக இலங்கையில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கும் பரம்பலுக்கும் மிகப் பயனுள்ள சில அறிவுறுத்தல்களை வழங்கினான்.

கிறிஸ்தவ மறையைப் பரப்புவதற்கு போர்த்துக்கேய அதிகாரிகளும் படையினரும் தம்மாலான அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டுமெனவும் கிறிஸ்தவ மறையைத் தழுவுகின்றவர்கள் மதிக்கப்பட்டு சலுகைகள் வழங்கப்பட்டு, நல்ல முறையில் நடத்தப்பட வேண்டுமெனவும் சிறு பிள்ளைகளுக்கு மறை அறிவு அளிக்கப்பட வேண்டுமெனவும் ஆலய வழிபாடுகள் சிறந்த முறையில் இடம் பெற வேண்டுமெனவும் நோயாளிகள் நன்கு பராமரிக்கப்படுவதோடு, ஏழைகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுக் கவனிக்கப்பட வேண்டுமெனவும் பல பயனுள்ள ஆலோசனைகளையும் ஊக்குவிப்பையும் வழங்கினான்.

போர்த்துக்கேயர் கோட்டை மன்னனுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு முன்பே இஸ்லாமியர் கோட்டை மன்னனுடன் ஏகபோக வாணிபத் தொடர்பை ஏற்படுத்தியதுடன், கொழும்பில் குடியேற்றத்தையும் கொண்டிருந்தனர். இதனால் போர்த்துக்கேயருக்கு எதிராக மக்களையும் மன்னனையும் கிளர்ச்சி செய்யத் தூண்டினர். இஸ்லாமியர் எதிர்ப்பினால் போர்த்துக்கேயர் பல அறைகூவல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும் படிப்படியாக தங்கள் அதிகாரத்தை கோட்டை அரசில் நிலைநாட்டியதோடு, கோட்டை மன்னனுடன் "ஒப்பந்தம்" செய்து தேவைக்கேற்ப அதைப் புதுப்பித்துக் கொண்டனர்.

போர்த்துக்கேயர் கோட்டை அரசின் அரசியலில் தலையிடாது தமது வாணிபத்தைப் பலப்படுத்துவதிலும் இஸ்லாமியரின் வாணிபத்தைத் தடை செய்வதிலுமே முனைப்புடன் செயற்பட்டனர். எனினும், 1518 இல் போர்த்துக்கேயர் கொழும்பில் ஒரு கோட்டையைக் கட்டியமை பல தரப்பிலும் பலவிதமான ஊகங்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் இடமளித்தது. மேலும் 1519 இல் போர்த்துக்கேயர் எழுபதிற்கும் அதிகமான சிங்களவர்களை கிறிஸ்தவத்தை ஏற்கவும் தங்கள் குடியேற்றங்களில் குடியிருக்கவும் வற்புறுத்தியபோது முறுகல் நிலைமேலும் அதிகரித்தது.

1518-1521 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் போர்த்துக்கேயர் கட்டிய கோட்டை மீது தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. போர்த்துக்கேயர் கொழும்பில் கோட்டை நிறுவியமையும் படையை நிறுத்தியமையும் சுதேசிகளின் வெறுப்பிற்கும் அரசில் பெரும் குழப்பங்களுக்கும் கொந்தளிப்பிற்கும் காரணமாக அமைந்ததால் 1524 இல் போர்த்துக்கேயர் கோட்டையை இடித்து 20 படையினரைக் கொண்ட சிறு குழுவைத் தவிர ஏனையோரை. மீண்டும் இந்தியாவுக்கு அழைத்துக் கொண்டனர்.

### போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது இலங்கையின் அரசியல் நிலைமை

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என மூன்று இராச்சியங்கள் காணப்பட்டன. எட்டாம் வீரபராக்கிரமபாகு கோட்டை இராசதானியின் அரசனாக இருந்தான். சேனாசம்மத விக்கிரமபாகு கண்டி இராச்சியத்தின் அரசனாகவும் பரராஜசேகரம் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசனாகவும் இருந்தனர். இவை தவிர்ந்த வன்னித் தலைவர்களின் கீழ் வன்னிப் பிரதேசம் ஆட்சி செய்யப்பட்டது. அப்பிரதேச ஆட்சியாளர்கள் பிரதான இராச்சியத்துக்குப் பணிந்து செயற்பட்டனர். 16ஆம் நூற்றாண்டில் இந்நாட்டிலிருந்த இராச்சியங்களுக்குள் கோட்டை இராச்சியம் முதலிடம் வகித்தது.

கி.பி 1519 இல் ஆட்சிபீட மேறிய ஒன்பதாம் தர்மபராக்கிரமபாகுவின் சகோதரன் ஆறாம் விஜயபாகு மன்னன் போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையைக் கடைப்பிடித்தான். 6 ஆம் விஜயபாகு மன்னனுக்கு முதல் திருமணத்தின் மூலம் புவனேகபாகு, மத்தும பண்டார, மாயாதுன்னை எனும் மூன்று பிள்ளைகள் இருந்தனர்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்களாதேஷ்...

எது. குறித்த உடலம் தெப்பம் ஒன்றில் மிதந்து வந்த நிலையில் கரை ஒதுங்கி இருக்கின்றது. சடலத்தின் அருகில் பையொன்றில் பங்களாதேஷ் நாட்டுப் பணம் காணப்பட்டதால் சடலம் பங்களாதேஷ் நட்டவர் என இனங்காணப் பட்டது.

நீதிமன்ற அனுமதியுடன் சடலத்தை மீட்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(ம-7,299)

## யாழ்.போதனா...

சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (ம-7,33)

## யாழ்ப்பாணத்தில்...

வடக்கு சுகாதார பணிமனையின் ஏற்பாட்டில் குறித்த வேலைத்திட்டம் கொக்குவிலில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டதுடன் தொடர்ச்சியாக அதிக டெங்கு தொற்றாளர்கள் இனங் காணப்படும் ஏனைய பகுதிகளிலும் குறித்த கண்காணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

முதன் முறையாக யாழில் ட்ரோன் கமரா மூலம் உயரமான கட்டடங்கள், வீடுகளின் கூரைப்பகுதிகளில் நீர் தேங்கும் இடங்கள் விசேட சோதனைக் குட்படுத்தப்படுவதாக சுகாதார பணிமனையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-7)

## தமிழரசுக்...

வரை ஏகமனதாக தேர்ந்தெடுக்கும் வகையில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் கலந்துரையாடுவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்ட போதிலும் அம் முறைமை சாத்தியப்படாமையினால் தேர்தல் ஒன்றின் மூலமே தலைமை தேர்ந்தெடுக்கப்படும் நிலைமை தற்போது உருவாகியுள்ளது.

இந்தநிலையில் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை.சோ. சேனாதிராஜாவின் கோரிக்கைக்கு அமைவாக இன்று 20ஆம் திகதி திருகோணமலையில் மத்திய குழு கூட்டத்தினைக் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நாளை 21ஆம் திகதி திருகோணமலையில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதுடன், அன்றைய தினமே வெற்றிபெற்ற வேட்பாளர் அறிவிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நயினைத்...

ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது. அதற்கான பூர்வாங்க கிரியைகள் பிரதிஷ்டா கிரியைகளுடன் கடந்த புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமானது.

தொடர்ந்து, எதிர்வரும் ஞயிற்றுக் கிழமை 21.01.2024 அன்று நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கு உரிய தூபதீபம், யந்திர ஸ்தாபனங்கள், பரிவார மூர்த்திகள் பிரம்மஸ்தாபனம், அர்த்த பந்தண சாத்தல் என்பன இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து, எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 07 மணி முதல் மறுநாள் செவ்வாய்க் கிழமை மாலை 05 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வுகள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து, மறுநாள் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 09.38 மணி முதல் முற்பகல் 11.20 மணி வரையிலான சுபநேரத்தில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கு புனராவர்த்தன அஷ்டபந்தன ஸ்வரண பந்தன உத்தமோத்தம த்ரயத் திரும்சமத் குண்டபக்ஷ மஹாயாக பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ம-7)

## பயங்கரவாத...

சட்டத்தை மாற்றீடு செய்வதற்காக இலங்கையின் பாராளுமன்றத்தில் தற்போது ஆராயப்பட்டு பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்து மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது இலங்கையின் உள்நாட்டு பாதுகாப்பிற்கான ஒரு அர்த்தமுள்ள சீர்திருத்தமாக இருக்க வேண்டும். ஆனால் இந்த முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலமானது கடந்த காலத்தின் உரிமை மீறல் வடிவங்கள் ஆபத்தை கொண்டுள்ளது.

தற்போது உத்தேச சட்டமூலம் கடந்த காலங்களின் விமர்சனத்தின் பின்னர் கைவிடப்பட்ட சட்டமூலங்களிற்கு ஒப்பானது. இது பயங்கரவாதம் என்றால் என்ன என்பதற்கான கணங்களை மிகவும் பரந்துபட்டதாக வரையறுக்கின்றது. நீதித்துறையின் உத்தரவாதங்களின் வரம்பை கட்டுப் படுத்துகின்றது. குறிப்பாக சட்டபூர்வமற்ற தடுத்து வைத்தல் குறித்த நீதித் துறையின் உத்தரவாதங்களை கட்டுப் படுத்துகின்றது.

மேலும் இந்த சட்டமூலத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை மனித உரிமை ஆணைக்குழு பார்வையிடுவதை அந்த இடங்களிற்கு செல்வதை கட்டுப்படுத்துகின்றது.

தற்போதைய வடிவத்தில் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அது உரிமைகளை கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகளவு அதிகாரங்களை வழங்கும்.

மேலும் இத்தகைய அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதை தடுப்பதற்கான பாதுகாப்புகள் இல்லை. மேலும் பிடியாணை இன்றி பாதுகாப்பு படையினர் தனிநபர்களை கைது செய்வதற்கான ஆபத்து அதிகரிக்கும் - இது குறித்த சட்ட அடிப்படைகளை உத்தேச சட்டமூலம் பலவீனப்படுத்தும்.

மேலும் இந்த சட்டமூலம், விசாரணைகளிற்கு முன்னர் நீண்ட காலம் தடுத்து வைப்பதற்கும் அனுமதிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## அரசு...

மக்கள் சக்தி தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பேரணியானது வற் வரி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பு, தேர்தல்கள் பிற்போடப்படு கின்றமை, கருத்துச் சுதந்திரத்தை பறிக்கும் சட்டமூலங்களை நிறைவேற்றி வருகின்றமை உட்பட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் நடத்தப்பட உள்ளன.

அதற்கமைய இதன் முதலாவது பேரணி எதிர்வரும் 30ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## யாழ்...

கள் அதிகரித்த ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் உள்ள பொதுமக்கள் வீடுகளுக்கும் சுகாதார அதிகாரிகள், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமூக அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸார் விஜயம் மேற்கொண்டு நுளம்பு உற்பத்தியாவதை கட்டுப்படுத்தும் நோக்கில் வீட்டின் சுற்றுப்புறங்களை பார்வையிட்டு நுளம்பு உற்பத்தியாவதற்கு ஏதுவாக தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்களை இனங்கண்டு வீட்டு உரிமையாளர்கள் உதவியுடன் அகற்றி வருகின்றனர்.

குறித்த நடவடிக்கையின் போது டெங்கு நோய் பரவல் தொடர்பாக சுகாதாரத்துறையினரால் பொதுமக் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை, வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


மெகா பவர்
திகதி 19/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1712
P 14 18 22 25 34
33676

மஹஜன சம்பத
திகதி 2024/01/19
சீட்டிழுப்பு இலக்கம் 5364
Q 1 8 5 1 7 6
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.19
சீட்டிழுப்பு இலக்கம் 0673
மிதுனம் 12 31 32 56 மிதுனம்
20549 27

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3606
சீட்டிழுப்பு திகதி 19.01.2024
F 16 18 29 39
F 51204
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.01.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1394
U 25 43 62 74 U
63645

லக்கி 7 VIP
திகதி 2024.01.19
சீட்டிழுப்பு இலக்கம் 0190
G 8 5 8 9 9 0 G
தேசிய லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிர தன சம்பத
19.01.2024 வெற்றி வாரம் 072
W 3 5 9 4 0 1
82662
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,775,627.20
DLB
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2338 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.01.19 தினம் வெள்ளிக்கிழமை
10 13 34 59 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,920,403.20
22134
DLB

சனிதா
திகதி 2024.01.19 வெற்றி வாரம் 4499 வர்ணம் செம்மஞ்சள்
28 33 38 46 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,578,644.80
14451
DLB

சசிரி
வெற்றி வாரம் 430
சீட்டிழுப்பு திகதி 2024.01.19
பச்சை
04 17 19
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,042,200/-
DLB

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 4050 வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.19 தினம் வெள்ளிக்கிழமை
06 40 47 50 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,424,234.40
824899
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 26 20 37 73 75
1514
19.01.2024
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 494,790,496.20
DLB
தொலை பேசி : 011-2 333 546-47

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2164
சீட்டிழுப்பு திகதி : 2024.01.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,842,864/-
04 36 66 71 X
163578
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
மானிப்பாய்

புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர்
(CONSULTANT SURGICAL ONCOLOGIST)

**Dr.G.Sritharan**

திங்கள்,புதன்,வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில்
5.00 PM
சனி மற்றும் ஞாயிறுக்கிழமைகளில்
2.00 PM

புற்றுநோய் அறுவை சிகிச்சை சேவை

முதல் 25 சத்திரசிகிச்சை ஆலோசனைகளும் (Consultation Channeling)
இலவசமாக வழங்கப்படும்

புற்றுநோய் பரிசோதனை

* மார்பகப் புற்றுநோய் பரிசோதனைகள் மற்றும் மார்பு மீள்உருவாக்க சிகிச்சைகள்
* வாய் புற்றுநோய் பரிசோதனை
* குடல் புற்றுநோய் பரிசோதனை
* உணவுக்குழாய் மற்றும் வயிற்றுப் புற்றுநோய் பரிசோதனை
* கழுத்து புற்றுநோய் (தைரொயிட்) பரிசோதனை
* அதிக ஆபத்துள்ள நோயாளிகளுக்கான வேறு குறிப்பிட்ட பரிசோதனைகள்

(C-8168)

முன் பதிவுகளுக்கு :- 0770661031 0212256990



## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் பலாலி வீதி பரமேஸ்வரா சந்தி
அருகாமை ராமநாதன் வீதி முகப்புடன்
1 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

யாழ் பல்கலைக்கழகம் முன்பாக மற்றும்
ராச பாதை வீதியிலும் 2 1/2 பரப்புகாணி
விற்பனைக்கு உண்டு.

விலை நேரில் பேசிக்கொள்ளலாம்.
பார்வை நேரம் :
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

(18690)

**077 468 3354**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு
காணி A9 வீதி முகப்புடன்
விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
வட மாகாண சபை 300 மீற்றர்
கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்

(18688)

**071 173 3911**
**076 853 5022**



## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின்
கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 270 /= | Max 3Kg |
| 1 Kg றவை | - | 285 /= | |
| 1 Kg கோதுமை மா | - | 183 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 189 /= | |
| 1 Kg அரிசி மா | - | 199 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - | 292 /= | Max 5Kg |
| 1 Kg தீட்டல் பச்சை | - | 165 /= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - | 430 /= | |
| 01 Lux Soap | - | 165 /= | ~~175 /=~~ |
| 01 Sunlinght Soap | - | 140 /= | ~~150 /=~~ |
| 450g நெஸ்டமோல்ட் | - | 780 /= | ~~830 /=~~ |
| 400g sustagen சஸ்ரயன் | - | 3435 /= | ~~3900 /=~~ |
| 01 Supiri றின்மீன் | - | 480 /= | ~~850 /=~~ |
| 1Kg சோயா | - | 499 /= | |
| 180ml Sunsilk Shampoo | - | 440 /= | ~~480 /=~~ |

1040/=




~~1080/-~~
Max - 02

(18693)

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30



## IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance
Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (18663)



## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

**STUDY IN UK & WORK VISA**

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு
உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு
நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்

**WEC COLLEGE**
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
Whatsapp: 0094779265447
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

(18672)



## காணி விற்பனைக்கு

நிலப்பரப்பு
யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில்
பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன்
அமைந்துள்ள 4 1/2 பரப்பு காணி
விற்பனைக்குண்டு. (18686)

**077 077 4919**



## Vacancy

Arpico Insurance PlC, Jaffna Looking for an Insurance Assistant full time office Job
Minimum Qualification - G.C.E A/L

Contact No :
**077 192 0206**
**077 772 7721**

(18685)



## Zoom மூலமான புலமை வகுப்பு

தரம் 03,04,05ம் வகுப்புகளுக்கு
வீட்டில் இருந்தபடி கற்று
சிறந்த பெறுபேறு எடுப்பதற்கான
ஒரு வாய்ப்பு.

பகுதி I, II இற்கு பொருத்தமான 100
வினாத்தள்கள் செய்துவிடப்படும்.

(18630)

☎-077 214 0675



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்




விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

(C-8170)

**V2 TRAVELS**

எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
•பண்டத்தரிப்பு •சங்கானை
•கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



## வீடு வாடகைக்கு

வலிகாமம் மேற்கு சித்தங்கேணி
பண்டத்தரிப்பு பிரதான வீதிக்கு
அருகில் நல்ல சூழலில் சகல
வசதிகளும் கொண்ட
வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : (18677)

**077 367 1062**


# நாவற்குழியில் ஆட்டோ விபத்து குடும்பஸ்தர் பலி

சாவகச்சேரி நாவற்குழி பகுதியில் இடம்பெற்ற ஆட்டோ விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை அமல்ராஜ் (வயது -35) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாவற்குழி செம்மணி வீதியுடாக முச்சக் கரவண்டியில் தனது குடும்பத்துடன் பய ணித்த போது நாய் குறுக்கே பாய்ந்ததில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.(ம-7)

## இளம்...

(வயது-31) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

காய்ச்சல் காரணமாக தனியார் வைத் தியசாலை ஒன்றில் இரு நாட்கள் சிகிச்சை பெற்ற பின் நேற்று முன்தினம் வங்கிக்கு சென்றவேளை மயக்க முற்றுள்ளார்.

உடனடியாக தனியார் வைத்திய சாலை ஒன்றில் அனுதிக்கப்பட்டுபின் மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா வைத்தியசாலை க்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனி ன்றி அவர் உயரிழ ந்துள்ளார்.

இதேவேளை பிரஸ்தாப நபர் யாழ். போதனா வில் அனுமதிக்கப் பட்ட வேளை அவ ரின் உடல்நிலை மிகவும் பாதிக்கப் பட்டிருந்ததாக யாழ். போதனா வைத்தியசாலை யின் பணிப்பாளர் வைத்தியர் சத்திய மூர்த்தி தெரிவித் தார். (ம-7,33)


## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள புடைவை
முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு
அனுபவம் உள்ள பழக விரும்பும்
ஆண்/பெண் விற்பனையாளர்
உடன் தேவை. மேலும் கணனி
அனுபவம் உள்ள சிட்டை எழுதுனர்
இருபாலாரும் விரும்பத்தக்கது.

**021 222 9286**
**077 748 8093**

(18692)



## CANADA VISITOR VISA



VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-8170)
0777-068-777
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்
V2 TRAVELS



## பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல்(implant), "கிளிப்" போடுதல்
மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்

**கம்சியா**
பற்சிகிச்சைப் பிரிவில்
(யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக,
BOC வங்கிக்கு அருகில்) நடைபெறுகிறது.
578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C-8169)

**077 375 4490**
**077 220 2769**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org